# பக்தி விஜயம்..

ஆனி - ஆடி : 2013
ரதம் : 02
வழி : 06

இல்லங்களில் படிக்கவேண்டிய பக்தி மலர்



## நவராத்திரி சிறப்புமலர்

புரட்டாதி சனிதோஷ பரிகாரங்கள்

அமாவாசையில் உதித்த பௌர்ணமி நிலவு!

உலகின் சிறந்த மாணவன்..

வெற்றியின் ரகசியம் விஜயதசமி!

சிவன் மீது வீசிய கத்தி!

உள்ளே ... வாசிப்பு இன்பமும், ஆன்மீகமும் !

நம்நாட்டு சஞ்சிகை

ஒன்பது உயிர்களின் வாணிவிழா பூஜை!

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## ' பக்தி விஜயம்.. ' பாலர் வகுப்புகளில் ..

அன்பான சிறார்களுக்கு விஷேசமான
நவராத்திரி வாழ்த்துக்கள் ..

நவராத்திரியின் சிறப்பான அம்சம் கொலு வைப்பதாகும். இதனை பெரியோர்கள் பின்பற்றுவதும், சிறுவர்கள் அறிந்து மகிழ்வதும் நன்மை தரும்! பக்தியை வீட்டில் நிறைக்கும்!!

நவராத்திரி வழிபாட்டின் ஒரு பகுதியாக ஒன்பது படிகளை அமைத்து, அவற்றில் உருவ பொம்மைகளை அடுக்குவார்கள். ஒவ்வொரு படியிலும் ஒவ்வொரு அறிவு ஜீவன்களின் மண்பொம்மைகள் வைக்கப்படும்.

மனிதன் படிப்படியாக உயர்ந்து தெய்வ நிலையை அடையும் வழியை அவை காட்டுகின்றன ..






படி 01 - ஓரறிவு ஜீவனான தாவரங்கள் ..
படி 02 - ஈரறிவான நத்தை,சங்கு போன்றவை
படி 03 - மூன்றறிவான கறையான்,எறும்பு முதலியன ..
படி 04 - நான்கறிவான நண்டு,வண்டு போன்றவை
படி 05 - ஐந்தறிவான மிருகங்கள்,பறவைகள் ..
படி 06 - ஆறறிவுள்ள மனிதர்களின் பொம்மைகள்
படி 07 - உயர்நிலையடைந்த சித்தர்கள்,மகரிஷிகள்
படி 08 - தேவர்கள், நவகிரகங்கள், திக்பாலர்கள்
படி 09 - மும்மூர்த்திகள்,அம்பிகைகள் ஆகியோர் ..

பத்து நாட்களும் கொலுவை பார்க்கும் குழந்தைகளிடம்
ஆனந்தமும்,பத்தி உணர்வும் பெருகுகிறது ..


மாதாந்தம் ' பக்தி விஜயம்.. ' உங்களின்
வீடுதேடி வரவேண்டுமா?
சந்தாதாரர் ஆகுங்கள்!
0713861168, 0776649635
0232250071, 0774335144
இலக்கங்களில் தொடர்பு கொண்டு பதிவு செய்யுங்கள்
எஸ்.பி.முத்து - கணக்கு இல. 941641, இலங்கை வங்கியில்
சந்தாவை செலுத்தலாம்.
காசோலைகள், மணி ஓடர்கள் ஏற்கப்படுகின்றன.
இதுவரை பதிவு செய்யாமல் இருக்கும் வாசகர்கள் சந்தாதாரர் ஆகும்படி வேண்டுகிறோம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணபதி சரணம் ..



# எந்நாளும் இன்புற்றிருக்க...







"தாயிற் சிறந்த கோயில் இல்லை"

# பக்தி விஜயம்.



100/=







இந்து சமூகத்தின்
ஆன்மீக எழுத்துப் பணியில் ..



இதழ் உருவாக்கம்,
கணனி வடிவமைப்பு,
நிர்வாக இயக்கம் :
*எஸ். பி. முத்து*
(பிரதம ஆசிரியர்)
அனுசரணை :
*வை. திருச்செல்வம்*

இந்த பக்திச் சஞ்சிகை
வெளிவரும் முகவரி :
555, புதுத்தெரு,
மன்னார்,
இலங்கை.
தொலைபேசி :
**071- 3861168**
**077- 6649635**
**023- 2250071**
**077- 4335144**
மின்னஞ்சல் :
nenjame@gmail.com

சைவ அடியார்களுக்காக பல நூல்கள், சுவடிகள், சஞ்சிகைகள், இணையத் தளங்களிலிருந்து மூல விஷயங்கள் பெற்று, இலகு தமிழில் தரப்படுகின்றன. அவை என்றும் நன்றிக்குரியன..

பெரியோர்களும், சான்றோர்களும் குறை, நிறைகளை எடுத்தியம்புவதோடு, வாசகர்களும் சமயச் செய்திகள், ஆக்கங்கள், விமர்சனங்களை தந்து ஆதரிக்க வேண்டுகிறோம்..

# எல்லோருக்கும்



# நலம் தரும் நவராத்திரி!

சிவச்செல்வர்களுக்கு வணக்கம் ..

இரண்டாவது ஆண்டில் தனது சேவையை பக்தி விஜயம் ஆற்றி வருவதையிட்டு பெருமளவு அன்பர்கள் மகிழ்கிறார்கள், வாழ்த்துகிறார்கள், ஒத்துழைப்பும் தருகிறார்கள்.

இதனால் மேலும் சிறப்பாக பணிபுரிய வேண்டுமே என்ற கடமையுணர்வுடன் செயலாற்றுகிறோம். எல்லோருக்கும் நன்றி.

முழுக்க முழுக்க சமயச்சிறப்புகளை எடுத்தியம்பும் நடவடிக்கையே இது.

சமூக வளர்ச்சி, சீர்திருத்தம், மக்கள் சேவை போன்ற அடைமொழிகளெல்லாம் இதற்கு கிடையாது.

'கையில் வெண்ணையை வைத்துக்கொண்டு நெய்க்கு அலைவது' என்று சொல்வது போல சமூகத்தை சரிப்படுத்த விரும்புபவர்களுக்குத் தேவையான ஆய்வுகள் அவர்களிடமே இருக்கின்றன. அவற்றின் அருமையை விளக்கவல்ல வழிகள் சைவத்தில் உள்ளன. முடிந்தவரை அவைகளை சேகரித்து தருவதற்கு முயற்சிக்கிறோம். அவ்வளவே.

-- அன்புடன் ஆசிரியர்







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பிரார்த்திக்கிறோம் ..



அன்பான வாசகர்களே,

நமது சகோதர உறவுகளின் இன்னல்களை நீக்கவும், அவர்களுக்கு நல்ல வாழ்வு தரவும் வேண்டி உங்கள் இஷ்ட தெய்வத்திடம் பிரார்த்தித்து உதவும்படியாக கைகூப்பி வேண்டுகிறோம்.

இயலக்கூடிய அளவில் அர்ச்சனையோ, கூட்டுப்பிரார்த்தனையோ, சிலநிமிட தனி வேண்டுதலோ, உள்மன மன்றாட்டமோ செய்யலாம். உங்களால் அவர்கள் நிச்சயம் காக்கப்படுவார்கள் என்பது உறுதி.




நோயுற்றவர்களின் தகவல்கள் பெற்று, அவர்களின் நலம் வேண்டி, ஒவ்வொரு மாதத்தின் இரண்டாவது வெள்ளிக்கிழமைகளில் 'பக்தி விஜயம் ..' நிறுவனம் ஆலய வழிபாடு செய்கிறது. பிரசாதமும் அவர்களுக்கு அனுப்பப்படுகிறது. விரும்புவோர் பெயர், நட்சத்திரத்தோடு தகவல்களை அனுப்பி வைக்கவும்.

**இந்த மாதத்தில்**
**நீங்கள் காப்பாற்றப்போவது**
**இவரை --**

அபினயா!

அழகென்றால் அப்படியொரு அழகு! வயது ஒன்பது. கண்களும், வதனமும் பார்ப்போரை கொள்ளைகொள்ளும். ஆனால், இந்த தெய்வீக மழலையோடு இறைவன் தான்மட்டுமே மகிழ வேண்டுமென்று நினைத்தாரோ என்னவோ, வெளியுலக வாழ்வை இழந்த நிலையில் இக்குழந்தை சித்த சுவாதீன நோயில் வாழ்ந்து வருகிறது.

இளம் பெற்றோர். இவளே மூத்த பிள்ளை. கூட ஒரு தங்கையும் உண்டு. பக்தியிலும், சேவையிலும் குறை வைக்காத குடும்பம். இன்முகமும், உபசரிப்பும் இவர்களின் வாழ்க்கைமுறை.

ஆயினும் தெய்வம் இவர்களை சோதிக்கிறது. இலங்கையிலும், இந்தியாவிலும் பார்க்காத மருத்துவம் இல்லை. செய்யாத செலவுகள் இல்லை. புரியாத வேண்டுதல்கள் இல்லை. தராத தானங்கள் இல்லை. இருந்தும் இதுவரை பலனில்லை. அபினயா இப்போதும் சிறிய மர வேலிக்குள்ளேயே வாழ்கிறாள். தவழ்ந்து தவழ்ந்து நம்மிடம் நிறைய கண்களால் பேசுகிறாள், நிறைய கேட்கிறாள். 'புரியவில்லையே அம்மா ..' என்று நமது கண்களிலும் பெருக்கெடுக்கிறது கண்ணீர்.

சிறப்பான இந்த அழகிய வீட்டில் நாளாந்த வேதனை அபினயாவே. வேலியை தாண்டி வந்து தங்களோடு எப்போது எமது குஞ்சு விளையாடுவாள் என்று தவிக்கும் இந்த குடும்பத்தோடு நாம் இணைவோம். அந்தக் குழந்தையை நாமும் பொறுப்பேற்போம். அவர்களின் வேதனையை நீக்குவோம். தெய்வம் நம் குரலுக்கு நிச்சயம் பதில்சொல்லும். நம்பி பிரார்த்தியுங்கள் ..

பெயர் : - அபினயா குலேந்திரன்
நட்சத்திரம் -- மூலம்
இராசி -- தனுசு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



குழந்தை அபினயாவும்,
செல்வராணி அம்மையாரும்
விரைவாக சுகம்பெற
வாசகர்கள் பிரார்த்திக்குமாறு
வேண்டுகிறோம்..








**இந்த மாதத்தில்
நீங்கள்
காப்பாற்றப்போவது
இவரை --**

திருமதி செல்வராணி!

ஆளுமையும், கம்பீரமும் மிக்க ஆசிரியை இவர். கற்பிக்கும் திறனுடன் சமூக வளர்ச்சியில் அக்கறை மிகுந்தவர். பக்தி மிக்கவர். சிறந்ததோர் கல்விமான்.

ஆனால் தற்சமயம் இவராகவே ஓய்வு பெற்றுக்கொண்டு வீட்டுக்குள் தன்னையும் முடக்கிக்கொண்டு, தனது புலமையையும் கிடப்பில் போட்டுவிட்டு வாழ்கிறார்.

காரணம் புற்றுநோய்!

எட்டு மாதங்களாக அதனுடன் போராடிவரும் இவருக்கு ஏகப்பட்ட துன்பம் -- உடலிலும், மனதிலும்.

குளிர்ச்சியான சோலையில் அமைந்த வீடு. கண்ணைப்போல கண்காணித்து சேவையாற்றும் கணவர். அடிக்கொரு தடவை அக்கறையாக விசாரித்து வருகின்ற சுற்றம். இருந்தும் டீச்சரின் வேதனைகளை அவரின் கண்களால் மறைக்க முடியவில்லை. வார்த்தைகள் ஒவ்வொன்றும் அறுவை சிகிச்சைகளின் வேதனையோடு கலந்து வருகின்றன. ஆண்டாண்டு காலமாக நடத்தி வந்த நிர்வாகத்திறனின் மனோபலம் கைகொடுப்பதால் துயரத்தை ஒதுக்கி வைத்து உரையாடுவது தெரிகிறது.

மார்புப்புற்று நோயில் இருந்து இவரை விடுவிக்கும் முயற்சியில் இப்போது அறுவை சிகிச்சை மூலமாக கட்டியொன்றை அகற்றியிருக்கிறார்கள். 'கரண்ட் ' பிடித்தும் வருகிறார்கள். தொடர்ந்து 'க்ளினிக் ' அழைத்துச் செல்கிறார்கள். 54 வயதானாலும் இன்னும் நிறைய இவரிடம் மிஞ்சிக்கிடக்கும் ஆற்றலும், புலமையும் சமூகத்திற்குத் அவசியமானவை. அவை நமக்கு கிடைக்க வேண்டுமானால் இக்கொடிய நோயிலிருந்து இவர் மீளவேண்டும். இதனை நாமும் பொறுப்பேற்கலாம். எமது அன்றாட வழிபாட்டில் ஒருநாள் இவருக்காக பிரார்த்திக்கலாம். சிறுதுளி பெரு வெள்ளமாகி, விரைவில் இறையருள் பெற்று நலமடைவார் என்பது நிச்சயம்.

பெயர் : -- திருமதி. செல்வராணி செல்வராஜா

நட்சத்திரம் : -- உத்தராடம்

இவரின் இஷ்ட தெய்வங்கள் : -- பிள்ளையார், அம்மன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பாமரர்கள் தெய்வ தத்துவம் அறிய வாய்ப்பற்றவர்களா? ..



வேதங்களுக்கே கிடைக்காத திருவடிகள் படிப்பில்லாதவர்களுக்கு எளிதில் கிடைத்து விடுவதால் வேதப்பொருளும் அவர்களுக்கு தானாகவே விளங்கி விடுகிறது. ஞான யோகம், கர்ம யோகம் என்றெல்லாம் படிக்காதவர்கள் குழம்புவதில்லை. ஏனெனில், தங்களின் அறிவில் அவர்கள் தங்கியிருப்பதில்லை. 'அவனின்' அன்பில்தான் அவர்கள் தங்கியிருக்கிறார்கள். அதனால் அந்த சரணாகதியிலேயே அவர்கள் ஏகப்பட்ட ஞானத்தை அடைந்துவிடுகிறார்கள். 'ஞானத்தைத் தேடினோம்' என்ற தொனி படிக்காதவர்களிடம் இல்லை. படித்தவன்தான் இன்னும் 'தேடிக்கொண்டே' யிருக்கிறான் பாவம்..





# ஆணவத்திற்கு ஆற்றல் வழி வகுக்கின்றதா? ..

ஆஞ்ச நேயரிடம்
இல்லாத ஆற்றல்களா!
அப்படியிருந்தும்
அவரிடம் இருந்த
பணிவை அறியாதவர்
இருக்க முடியுமா! ..
அறிய வேண்டியது
இதுதான் --
புத்திசாலிகள்
பலவான்களாக
இருப்பதில்லை.
பலசாலிகள்
பக்தியை நம்புவதில்லை
பக்தியுள்ளவர்களும்
மனிதர்களை



## தெய்வீக சந்தேகங்கள் ..



முக்கியமானவர்களாக ஏற்பதில்லை. தெய்வ நம்பிக்கை அதையும் தடுக்கிறது. இதையெல்லாவற்றையும் கடந்து அனுமார் மட்டும் கச்சிதமாக செயல்பட்டிருக்கிறார். எல்லா ஆற்றல்கள் இருந்தும் கூனிக்குருகியே சேவகம் புரிந்திருக்கிறார். கீழ்ப்படிவின் விளிம்பு வரை சென்றபிறகே கதாயுதத்தை கைகளில் எடுத்திருக்கிறார். சிவ அம்சமாக இருந்தும் மானுட ராமனைத் தொழுதார். ஆதலால் ஆணவத்திற்கு அறிவீனமே காரணம் ..





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தெய்வீக சந்தேகங்கள் ..

## இப்போதும் அசுரர்கள் இருக்கிறார்களா? ..

நரகாசுர வதம்கூட தீபாவளி கொண்டாட்டத்தில் மறந்துவிடுகிறது. ஆசை, கோபம், பொறாமை, புறக்கணிப்பு போன்ற அசுரர்கள் நம்மோடு தங்கியிருக்க, தீபாவளி மட்டும் வந்துவந்து போகிறது. பரமாத்மாவின் சக்ராயுதத்தால் நரகாசுரனை அழிக்க முடிந்தாலும் நமக்குள் அசுரர்கள் இருக்கவே செய்கிறார்கள் ..





## கடவுளும், மனிதனும் ஒன்றாக முடியுமா? ..

முடியும். கடவுளை வழிபடுதலே புண்ணியம் என்பதோடு மட்டும் நின்றுவிடுவதால் ஏகப்பட்ட ஆன்மீக வாய்ப்புகளை தவற விடுகிறோம். கடவுளிடம் உள்ள உயர் பண்புகளை நாமும் வளர்த்துக்கொள்வதையே வேதங்கள் எதிர்பார்க்கின்றன. கடவுள் என்றால் எங்கோ இருக்கின்ற எட்டாத பொருளென்று எண்ணுவதும் ஒரு இடைவெளியாகி விடுகிறது. அதனால்தான் ஸ்ரீராமபிரான் போன்ற மானிட வடிவிலும் இறைவன் தோன்றி பூமியில் இருந்திருக்கிறார். மனிதனுக்குள் இருக்கின்ற பண்புகள் தெய்வத்திற்கும் மேலானவை என்று வாழ்ந்தும் காட்டியிருக்கிறார். அனுமனும், சிவனும், அம்மனும், முனிவர்களும் அந்த குண மேன்மையில் மயங்கியதே இதற்கு சாட்சியன்றோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருதனார் மடம்
ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேயர்
ஆலயத்தில் ..







அனுமந்த உபாசகர்,
சிவஸ்ரீ இ. சுந்தரேஸ்வர குருக்கள்
ஆதீனகர்த்தா, பிரதம சிவாச்சாரியார்

# சனீஸ்வர தோஷ சாந்தி ஹோம பூஜைகள் ..

தனியாக சன்னிதானம் கொண்டு இங்கே சனீஸ்வர மூர்த்தி அடியார்களுக்கு நித்திய மங்களம் தருகிறார், தோஷங்களில் இருந்து காக்கிறார்.

புரட்டாதிச் சனிகளில் இங்கு பூஜா ஹோம வழிபாடுகள் சிறப்பாக நடைபெறுவதும், பெருமளவில் அடியவர்கள் கலந்து தமது சங்கடங்களை நிவர்த்தி செய்து, வாழ்வில் ஷேமங்களைப் பெறுவதும் வருடாந்த நிகழ்வாகும்.

ஒரு நாள் தசரத சக்கரவர்த்தியை தனது தேவ லோகத்திற்கு அழைத்து கௌரவித்தான் தேவேந்திரன்.

அப்போது தேவ சபையில் வீற்றிருந்த எல்லோரையும் தசரதருக்கு அறிமுகம் செய்துகொண்டு வந்தான். கூடவே சக்தி வாய்ந்த நவக்கிர தேவர்களின் இருப்பிடத்திற்கு அழைத்து வந்து அவர்களையும் இந்திரன் அறிமுகம் செய்து வைத்தான் -- சனீஸ்வரனைத் தவிர.

சகலரின் ஆசிகளும், வாழ்த்துகளும் தசரதருக்கு நேரடியாக கிடைத்தது. ஆனால் சனீஸ்வரன் மட்டும் தனது வாழ்த்துகளை இந்திரனின் மூலமாக தெரிவித்தார். இது அரசரின் மனதில் ஒரு நெருடலை தந்தது.

இவ்வளவு தேவாதிதேவர்களும் தன்னை வாழ்த்தும்போது சனி பகவான் மட்டும் தன்னை பார்க்கவில்லையே என்ற வருத்தத்தோடு விருந்துகளில் கலந்து கொள்கிறார் சக்கரவர்த்தி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லா உபசாரங்களையும் முடித்துக்கொண்டு தசரத வேந்தர் விண்ணுலகில் இருந்து புறப்பட்டார். வரும் வழியில் சனீஸ்வரரின் மண்டபத்தின் வழியாக வந்துகொண்டிருந்தார். சனீஸ்வரர் மறுபுறத்தில் திரும்பி அமர்ந்திருந்தார். அவரது பின் தோற்றத்தை தசரதன் கைகூப்பி வணங்கினான்.

சனி பகவானும் திரும்பாமல் இருந்தவாறே,
" மன்னா, என் அருகில் வராதே! ஆயினும் உனக்கு என் ஆசிகளும் வாழ்த்துகளும் என்றென்றும் இருக்கும் .. சென்று வா!"
என்று கூறி விடை தந்தார்.

இதனால் ஓரளவு மகிழ்ச்சியடைந்த தசரதன் பகவானை பார்க்க முடியவில்லையே என்ற குறையோடு அங்கிருந்து மெதுவாக நடக்கலானார். அப்போதும் தயங்கி, ஒரு நப்பாசையால் சனீஸ்வரனைத் திரும்பிப் பார்த்தார்.

'இவன் போயிருப்பான் ..' என்று நினைத்த சனி பகவானும் நேராக அமரும் பொருட்டு தனது இருக்கையில் திரும்பி அமர்ந்தார்.

அந்தோ! இருவரும் சந்தித்துக்கொண்டார்கள். ஒருவரை ஒருவர் நேராக பார்த்து விட்டார்கள். தசரதனுக்கு ஏகப்பட்ட மகிழ்ச்சி. ஆனால் சனீஸ்வரன் உள்ளத்திலோ ஆயிரம் இடிகள் விழுந்தது போல அதிர்ச்சி. எது நடக்கக்கூடாது என்று எண்ணினாரோ, அது நடந்து விட்டது. தனது பிரியமுள்ள தசரதனை இனி யாராலும் காப்பாற்ற முடியாதே என்ற வேதனையில் ஆழ்ந்தார்.

ஆமாம். இன்றும் நாம் ராமாயணத்தில் கேட்டு துடிக்கின்ற துயரச் சம்பவங்கள் அனைத்துக்கும் அன்றைய இந்த சம்பவம்தான் காரணமாகியது. இதனை அன்றே சனி



# தமது பக்தர்களை காக்க பாடுபடும் சனி பகவான்

தமது பார்வையால் துன்புறும் அடியார்களை சனி பகவான் கைவிடுவதில்லை. தோஷ பரிகாரங்களை வகுத்து, அவர்களைக் காப்பாற்றி விடுகிறார்.

இவ்வருடம் சனி தோஷத்துக்கு இலக்காகும் நட்சத்திரங்கள் இவை : --

கன்னிராசி :-- உத்தரம் 2, 3, 4ம் பாதம், அத்தம். சித்திரை 1, 2ம் பாதம்

துலாராசி :-- (ஏழரைச்சனி) சித்திரை 3, 4ம் பாதம். சுவாதி, விசாகம் 1, 2, 3ம் பாதம்

விருச்சிகராசி :-- விசாகம் 4ம் பாதம், அனுஷம், கேட்டை

மீனராசி :-- (அட்டமத்துச்சனி) புரட்டாதி 4ம் பாதம், உத்தரட்டாதி, ரேவதி

மேடராசி :-- ( 7ல் சனி) அச்சுவினி, பரணி, கார்த்திகை 1ம் பாதம்

மிதுனராசி : -- ( 5ல் சனி ) மிருக சீரிடம் 3, 4ம் பாதம். திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3ம் பாதம்

கடகராசி : -- (அர்த்த அட்டமச் சனி) புனர்பூசம் 4ம் பாதம், பூசம், ஆயில்யம்

சனீஸ்வர ஹோம வழிபாடுகளில் பங்கு பற்றி சகல ஐஸ்வர்யங்களையும் பெற்றுய்யும் வண்ணம் வேண்டுகிறோம்.

"சர்வே ஜனகூ சுஹினோ பவந்து .."
எல்லா மக்களும் நன்மையடைவர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## நவராத்திரி பிரசாதம்!

மாணவர் பகுதி



# அம்பிகை அடியவர் அபிராமபட்டர்!

அம்பிகையான அபிராமியையும், அவளின் பரம பக்தனான அபிராம பட்டரையும் அறியாதார் இருக்கமுடியுமா!

ஒரு நாள் சரபோஜி மன்னன் தேவி தரிசனம் செய்ய அமிர்தகடேஸ்வரர் கோயிலுக்கு வந்தான். காண்கின்ற மங்கையரெல்லாம் தான் வணங்கும் அபிராமியே என்று அவர்களை பூஜிக்கவிழைவதும், அவர்கள் மீது பூச்சொரிவதும் வழக்கமாகக் கொண்ட அபிராமி பட்டர் அந்நேரம் அங்கே தியானத்தில் அமர்ந்திருந்தார் ..

தன்னை மறந்து, தனது மனக்கண்ணில் அம்பிகையின் அலங்கார சொரூபத்தில் லயித்திருந்த பட்டருக்கு மன்னன் நெருங்கி வந்த சந்தடி தெரியவில்லை. சகலரும் மரியாதையோடு விலகி வழிவிட, ஒருவன் மட்டும் தன்னை ஏறெடுக்காமல் இருப்பது கண்டு வியந்தான் அரசன். வியப்பு அடுத்த கணம் கோபமாக மாற, அமர்ந்திருந்த அபிராமி பட்டரை நெருங்கினான்.

'என்ன பெரியவரே, நான் வந்தது தெரியவில்லையா! ..'' என்றான் அவரிடம்.

அம்பாளின் கவனத்தில் இருந்த பட்டரின் காதில் மன்னனின் குரல் மெலிதாய் விழவே, ''இல்லையே! எனக்கு தெரிவதெல்லாம் அம்மையின் பேரழகுதான் .. அதை எப்படிப் புகழ்வேன்! ..'' என்று கனவில் பிதற்றுவதுபோல பதில் சொன்னார். அப்போது அவரின் முகத்தில் தெரிந்த தெய்வீகத்தைக் கண்டு திகைத்தான் வேந்தன். இருப்பினும் அவர் நடிக்கிறாரோ என்றறிய விரும்பி மீண்டும் கேட்டான்

## விண்ணிலே வீசியெறிந்த காதணி -- அமாவாசையில் நிலவானது!



''ஓ, அப்படியானால் இன்றைய நாளும் உமக்கு தெரிந்திருக்குமே, இன்று அமாவாசை எத்தனை நாழிகைக்கு இருக்கிறது? '' என்று கேட்டான்.

இதற்கு பட்டர் சொன்ன பதில் தூக்கி வாரிப் போட்டது ..

'' அமாவாசையா? யார் சொன்னது! இன்று பௌர்ணமி ..'' என்றார்.

பூரண அமாவாசையாகிய தினத்தை பௌர்ணமி என்று பட்டர் கூறியதும், தன்னை மதிக்காமல்வேறு நடந்ததும் கண்டு சினமடைந்தான் சரபோஜி மன்னன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



''இவன் சொன்னவாறே இன்று பௌர்ணமியாக இருந்தால், பூரண சந்திரன் வானிலே பிரகாசமாகத் தோன்ற வேண்டும். அப்படித் தோன்றத் தவறின், இவனை கழுவிலேற்றி கொன்று விடுக ..'' என்று படைவீரர்களுக்கு உத்தரவிட்டுச் சென்றான்.

அதன்படியே வீரர்கள் தன்னை சூழ்ந்தபோதுதான் சுயநினைவுக்கு வந்த அபிராமி பட்டர் நடந்ததை அறிந்தார். மன்னனை மதிக்கத் தவறியதற்கும், தவறான திதியை கூறியதற்கும் வேதனையுற்றார்.

இரவானதும் கழுவிலேற்றும் தருணமும் வந்தது. தன்னைக் காக்குமாறு அம்பிகையை நோக்கி மனமுருகி வேண்டினார். அடுத்த கணமே அம்பாள் தோன்றி தனது காதணியை கழற்றி விண்ணிலே வீசியெறிந்தாள். அது பேரொளியை வீசிக்கொண்டு வானத்தில் பூரண சந்திரனாக உதித்தது.. இதைக்கண்டு மன்னனும், மக்களும் உட்பட உலகமே திகைத்துப்போனது.

நடந்தது இதுதான் ..

மன்னன் கேள்வி கேட்டபோது, அபிராம பட்டரின் மனக்கண்ணில் தோன்றிய காட்சியில் அம்பிகையின் ஆபரணங்கள் ஜொலித்துக்கொண்டிருந்தன. கண்களைக் கூசச்செய்த அந்த ஒளியை நிலவொலியாக கருதி மன்னனின் கேள்விக்கு இன்று பௌர்ணமி என்று பதில் சொல்லிவிட்டார் பட்டர்.

இக்கதையின் உட்பொருள், அமாவாசை இருள் போன்ற துயரம் நம்மைத் துன்புறுத்தினாலும், வருந்தி வேண்டினால் எந்த இருளையும் நீக்கி தம் பக்தர்களை அம்பிகை காப்பாள் என்பதே ..









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# நவராத்திரி தலங்கள்..

# வேலணை பெருங்குளம் ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்!

**2002**ம் ஆண்டு ஆடி உற்சவத்தில் ஒரு அதிசயம் இங்கே நடந்தது ..

ஒன்பதாம் திருவிழாவுக்கு சப்பறம் இழுக்கவேண்டும். மக்கள் பெருமளவில் இடம்பெயர்ந்திருந்தபடியால் பழைய மடல்சப்பறம் பழுதடைந்து விட்டது. எப்படியோ அடியார்கள் ஒன்று சேர்ந்து எல்லாப் பாகங்களையும் பொருத்தி ஒரு புதிய சப்பறத்தை செய்தார்கள். இழுப்பதற்கு வடம் வேண்டும். தற்காலிகமாக தேர் வடத்தை பயன்படுத்த எண்ணினார்கள். ஆனால் தேர் வடத்தை வெளியே எடுப்பதும் சாத்தியமற்றதாகிப் போனது.

மறுநாள் சப்பறத்திருவிழா. புதிதாக வடம் வாங்குவதானால் 100,000 ரூபா வேண்டும். செய்வதறியாத நிலையில் பக்கத்து ஊரில் வடம் கடனாக வாங்குவோம் என்ற நிலையில் பக்தர்கள் இரவைக் கழித்தார்கள். எல்லோருக்கும் மிகுந்த கவலை.

மறுநாள் விடிந்ததும் விடியாததுமாக இரண்டு மீனவ இளைஞர்கள் ஓடிவந்து குருக்களின் கதவை தட்டினார்கள். மீன் பிடித்துக்கொண்டிருந்த தமது வலையில் பாம்புபோல ஒரு பொருள் அகப்பட்டதாகவும், இழுத்துப்பார்த்ததில் தேர்வடம் போல இருப்பதாகவும் கூறினார்கள்.

உடனே, ஆலய நிர்வாகம் உழவு யந்திரங்களோடும். ஆட்களோடும் சென்று வெளியே எடுத்துப் பார்த்தபோது 750 மீட்டர் நீளமான தேர் வடம் ஒன்று கிடைத்தது. இந்த அதிசயத்தை மறுநாள் பத்திரிகைகள் படத்தோடு பிரசுரித்திருந்தன ..



## தேவியர் சிறப்புகள்! ..

**ஆ**தி பராசக்தி தனது பல்வேறு தோற்றங்களில் உயிர்களை ரட்ஷித்து வருவதால் ஒவ்வொன்றும் தனிச்சிறப்பு பெறுகின்றன.

காளி, துர்க்கை, ஈஸ்வரி, லட்சுமி என்ற திருக்கோலங்களால் அருள் பாலித்து வருகின்ற அன்னைக்கு முத்துமாரி அம்மன் என்ற மூர்த்தமும் உண்டு. நம் நாட்டில் முத்துமாரி அம்மன் கோயில் கொண்டிருக்கும் திருத்தலங்களோ ஒரு தொகை.

இந்த அம்மனின் பழமைவாய்ந்த கோயில்களில் வேலணை பெருங்குளத்து தலமும் ஒன்று.

கல்வி, செல்வம், பலம் போன்ற பல தேவைகளை அம்பாளிடமிருந்து நிறைவேற்றிக்கொண்ட மக்களுக்கு நோய், பஞ்சம், வரட்சி வராமல் பார்த்துக்கொள்வதுதான் முத்துமாரி அம்மனின் வேலை. அதிலும், ஒதுக்குப்புற பிரதேசங்களில் வாழ்ந்துவந்த கஷ்ட ஜீவிகளின் நலனில் கருத்தாய் இருந்து காப்பாற்றி வருவது இந்த அம்பாளின் வழக்கமாகும்.

வேலணை பெருங்குளத்தில் உள்ள இந்த கோயிலின் வரலாற்றை மிக அரிதான தகவல்கள் மூலமே அறிய முடிகிறது. சரியான தகவல்கள் அறியமுடியாதிருப்பினும், இக்கோயிலைப்பற்றிய சில கர்ண பரம்பரைக் கதைகளும் இருக்கின்றன.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழரசர்களின் காலத்தைக் கொண்ட இவ்வாலயம் போர்த்துக்கேயரால் இடிக்கப்பட்டு அம்மன் விக்கிரகமும் காணாமல் போயிருந்தது. பின்னர் ஒல்லாந்தர் ஆட்சிக்காலத்தில் பெருங்குடி வேளாளன் கட்டமாதன் என்பவர் இருந்தார். அவர் ஒருநாள் வேலணை பெருங்குளத்தின் வடகரையில் ஓரமாக உலவிவந்த நேரத்தில் கற்புலம் என்ற பகுதியில் ஒரு காட்சியை கண்டார். ஆவரசும், நொச்சியும் அடர்ந்து கிடந்த பற்றை ஒன்றினுள் ஒரு கற்சிலை கிடப்பது தெரிந்தது.




சாட்சாத் அது ஸ்ரீ முத்துமாரி அம்மனுடையது என்று அறிந்தார்.

### குடிசையில் அம்பாள்! ..

உடனே ஊர்மக்களை அழைத்துவந்து, எல்லோருமாக அதனை தூக்கிவந்து குடிசை ஒன்றை அமைத்து பிரதிஷ்டை செய்து வணங்கினர்.

தற்சமயம் உள்ள ஆலயத்தின் தெற்கே உள்ள நெடுங்கேணி என்ற இடத்திலேயே அந்த காணித்துண்டு இருக்கிறது. இப்போது புதிதாக ஆலயம் அமைக்கப்பட்ட நிலையில் அதில் வாசம்புரிந்து வருவதும் அன்று கண்டெடுக்கப்பட்ட அதே அம்மனாக இருக்கலாம்.

### கோயில் கிடைத்தது அம்பாளுக்கு ..

குடிசை வாசம் மேற்கொண்டு வந்த அம்மனுக்கு கல்லால் ஒரு ஆலயத்தை அமைத்துத்தர பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதியில் திருவருள் கிட்டியது. அறுபது பரப்பு காணியை வாங்கி கல்லாலும், சுண்ணாம்பாலும் அழகியதொரு கோயிலை கட்டிமுடித்தனர் அடியவர்கள். அதன்பின் பெருமளவில் மக்கள் வந்து வழிபட்டுச் செல்ல சந்தரப்பம் கூடியது. அந்நேரத்தில் வாழ்ந்த புங்குடுதீவைச் சேர்ந்த காசித்தம்பி என்ற பெரியாரே அக்கோயிலைக் கட்டிக்கொடுத்த தர்மவான்.

காசித்தம்பி அவர்கள் அமைத்துத்தந்த கோயிலில் இருந்து அம்பாள் எண்பது ஆண்டுகள் அருளாட்சி நடத்தினாள். அதைத்தொடர்ந்து அன்னையின் உறைவிடம் மேலும் பொழிவு காண்பதற்கு வேளை வந்தது. 1885-1890 காலப்பகுதியில் யாதவராயர் இராமநாதன் என்பார் ஆகம விதிப்படி ஆலயத்தை அமைக்க முடிவு செய்தார். பழைய கோயிலை இடித்துவிட்டு தூபி, அர்த்தமண்டபம், சபாமண்டபம், மகாமண்டபம் முதலான சிறப்புகளோடு புதிய ஆலயத்தை அமைத்தார். ஆனால் கூரை மட்டும் ஓலையால் வேயப்பட்டிருந்தது. அக்குறையையும் தீர்த்து வைத்தார், அங்கே இருந்த கதிர்காமம் ஆறுமுகம் என்பார். கூரைக்கு ஓடு வேய்ந்து கொடுத்ததோடு, கொடித்தம்பம் ஒன்றையும் அமைத்துக்கொடுத்தார். அக்காலப்பகுதியில் விஸ்வகரும குலத்தார் முன்வந்து அம்பாளுக்கு வசந்த மண்டபம் அமைத்துத்தர, வயிர முத்தர் என்பார் யாக மண்டபம் அமைத்துக்கொடுத்தார்.

தொடர்ந்து சுற்றுமதிலும், கட்டுத்தேரும், உள்வீதியில் சுப்பிரமணியர், சனீஸ்வரர் கோயில்களும் உருவாக வள்ளல்குணம் படைத்த பல சமயசீலர்களும் உதவினர்.

காலத்தைவென்று இப்போது கம்பீரமாக நிலைகொண்டிருக்கும் ஆலயத்தின் சிறப்புகளுக்கு எல்லையே இல்லை. சகலவிதமான பரிவார முர்த்தங்கள், மண்டபங்கள், சப்பரம், சித்திரத்தேர், தெப்பக்குளம், அன்னதான மடம், ஆலய நிர்வாகம் முதலிய வசதிகளோடு பெரும்புகழீட்டி வருகிறாள் ஸ்ரீ முத்துமாரியம்மன்.

எல்லாவற்றிற்கும் மகுடமிட்டதுபோல, ஏழு தள ராஜகோபுரம் அமைக்கப்பட்டு, 2010 ம் ஆண்டில் கும்பாபிஷேகமும் நடத்தி முடித்திருப்பது பெருஞ்சிறப்பு.

**ஓம் சக்தி! ..**



வாயிற் காவலரான
துவாரபாலகர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நலம் தரும் நாட்களும், விரதங்களும்..



17. 09. 2013 — செவ்வாய்கிழமை
பிரதோஷ விரதம்

18. 09. 2013 — புதன்கிழமை
நடேசபிஷேகம்

19. 09. 2013 — வியாழக்கிழமை
உமாமகேஸ்வர விரதம்,
பூரணை விரதம்

21. 09. 2013 — சனிக்கிழமை
புரட்டாதிச்சனி

23. 09. 2013 — திங்கட்கிழமை
மகா பரணி, சங்கடஹர சதுர்த்தி

24. 09. 2013 — செவ்வாய்கிழமை
கார்த்திகை விரதம்

25. 09. 2013 — புதன்கிழமை
கபிலஷஷ்டி

27. 09. 2013 — வெள்ளிக்கிழமை
மத்தியாஷ்டமி, அட்டமி — நவமி

28. 09. 2013 — சனிக்கிழமை
புரட்டாதிச்சனி

30. 09. 2013 — திங்கட்கிழமை
ஏகாதசி விரதம்

01. 10. 2013 — செவ்வாய்கிழமை
சந்நியஸ்த மஹாளயம்

02. 10. 2013 — புதன்கிழமை
சித்தாமிர்தம்,
பிரதோஷ விரதம்



03. 10. 2013 — வியாழக்கிழமை
கேதாரேஸ்வர விரதம்

04. 10. 2013 — வெள்ளிக்கிழமை
அமாவாசை விரதம்

05. 10. 2013 — சனிக்கிழமை
புரட்டாதிச்சனி, நவராத்திரி
விரதாரம்பம்

08. 10. 2013 — செவ்வாய்கிழமை
சதுர்த்தி விரதம்

10. 10. 2013 — வியாழக்கிழமை
ஷஷ்டி விரதம்

11. 10. 2013 — வெள்ளிக்கிழமை
சரஸ்வதி பூஜை ஆரம்பம்

12. 10. 2013 — சனிக்கிழமை
புரட்டாதிச்சனி, அட்டமி — நவமி

13. 10. 2013 — ஞாயிற்றுக்கிழமை
சரஸ்வதி பூஜை, மஹாநவமி

14. 10. 2013 — திங்கட்கிழமை
விஜயதசமி, கௌரி விரதாரம்பம்

15. 10. 2013 — செவ்வாய்கிழமை
ஏகாதசி விரதம்

16. 10. 2013 — புதன்கிழமை
பிரதோஷ விரதம்







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாணவர் புராண அறிவு -- இல: 02 -- முடிவு

பரிசு பெறும் மாணவன் : --
செல்வன். இ. நிஷாந்தன்,
கிளி. இந்து மகா வித்தியாலயம்,
இராமநாதபுரம்,
கிளிநொச்சி



இக்காட்சிக்கான விளக்கத்தை இந்த மாணவன் தனது நடையில் இவ்வாறு தருகிறார் ..

..``இது மார்க்கண்டேயரை யமதர்மனிடம் இருந்து சிவபெருமான் விடுவிப்பதாகும். பதினாறு வயதையே ஆயுளாகக் கொண்டவர் அதனைப்பற்றி துயரப்படாமல், சிவபெருமானிடத்தில் பக்திகொண்டு சரணடைகிறார். இந்நிலையில் மார்க்கண்டேயரின் ஆயுள் முடிவடைந்த சமயத்தில் யமன் எருமை வாகனத்தில் உயிர் பறிக்க வந்து சேர்கிறார். மார்க்கண்டேயரும் சிவபெருமானைத் தழுவி தஞ்சமடைகிறார். யமதர்மன் வீசிய பாசக்கயிறு பெருமானின் மீதும் பட்டது. கோபமடைந்த ஈசனார் சிவலிங்கத்தில் இருந்து வெளிப்பட்டார். யமதர்மனை தனது இடது காலால் உதைத்து தள்ளினார். பயந்து நடுங்கிய யமதர்மன் தனது பிழையை பொறுக்கும்படி சிவபெருமானை பணிந்து, மன்னிப்பு கேட்கும் சம்பவமே இது.''..

இப்போட்டியில் ஆர்வத்தோடு பங்கு பற்றிய மாணவர்களை வியந்து பாராட்டுகிறோம்!

அனைவரையும் வாழ்த்துகிறோம்

## மாணவர் புராண அறிவு

### போட்டி இல : 04

இந்த காட்சியின் விபரத்தை சுருக்கமாக விளக்கி, எழுதி அனுப்பவும். பரிசுகள் உண்டு.

(பாடசாலை முகவரியிட்டு அனுப்பவும்.)



ஆசிரியர்,
`பக்தி விஜயம் ..'
555, புதுத்தெரு,
மன்னார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# நவராத்திரி தகவல்கள்!





நவராத்திரியின் பத்தாவது நாளாகிய விஜயதசமியில் அதிகளவில் அடியார்கள் சேர்ந்து சமஷ்டி பூஜையாகச் செய்தால் மிக நன்று. ஏனெனில், விஜயதசமி என்பது மோட்சத்தை அடையவும் கொண்டாடும் ஒரு தினம். அதுமட்டுமில்லாமல் கூட்டுப் பிரார்த்தனையின் சக்தியே தனி அல்லவா!

நவராத்திரியின்போது அனுட்டானங்களோடு காலையில் பூஜையை செய்யவேண்டும். தேவி மஹாத்மியத்தில் ஒவ்வொரு நாளும் ஒரு அத்தியாயம், அல்லது ஒரு குறிப்பிட்ட வழிமுறையில் பாராயணம் செய்யவேண்டும்.



**செலவு செய்ய வசதி இல்லையா? கவலை வேண்டாம். ஒரு குத்துவிளக்கில் வந்தமர்வாள் தேவி!**



முதல் மூன்று நாட்கள் துர்க்காஷ்டகமும், இரண்டாவது மூன்று நாட்கள் இலட்சுமி அஷ்டோத்திரமும், மூன்றாவது மூன்று நாட்கள் சரஸ்வதி அஷ்டோத்திரமும் உச்சரித்து தேவியரை பூஜிக்க வேண்டும். பூஜையில் பயன்படுத்தும் பூக்கள் வாடாமலும், அழுக்கில்லாமலும் பார்த்துக்கொள்ள வேண்டும்.





பூஜையில் வைக்கும் வெற்றிலை வாடாத, கோணலற்றவையாக இருக்கவேண்டும். பாக்கும் அப்படித்தான் நல்லதாக இருக்கவேண்டும். ஏனெனில் நம் உலகையும், நம்மையும் காக்கின்ற அன்னையர்க்கு சிறப்பானவற்றையே படைப்பதல்லவா நம் கடமை?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூஜைகளில் காட்டவேண்டிய சிறப்புகள் நமது வசதிகளைப் பொறுத்தது. எளிமையோ, ஆடம்பரமோ-- உள்ளன்போடு நாம் தருகின்ற பூஜையை தேவியர் அகமகிழ்ந்தே ஏற்றுக்கொள்கிறார்கள்.





பூஜை முடிந்ததும் ஒரு தம்பதிக்கு உணவு பரிமாறலாம். அல்லது, ஏதாவது ஒரு நவராத்திரி தினத்தில் ஒருமுறையேனும் விருந்து தரலாம். இதுவும் சாத்தியமில்லாவிட்டால், ஒரு சுமங்கலிக்கேனும் ஒருநாள் விருந்து கொடுப்பது சிறந்தது என்று வலியுறுத்தப்படுகிறது. இதைப்போல ருது அடையாத கன்னிப்பெண்களையும் உணவளித்து, உபசரித்து, தாம்பூலம் கொடுத்தனுப்புதல் புண்ணியமாகும்.



இப்பூஜையில் சொல்லப்படுகின்ற பெருஞ்சிறப்பு என்னவெனில், எவ்வித வசதியுமற்றவர்கள் அம்பாளுக்குரிய நவராத்திரி பூஜையை அளிக்கமுடியவில்லையே என்று வருந்தவேண்டியதில்லை. அவர்கள் அந்த இரவுகளில் பூஜிக்க, ஒரு குத்து விளக்கே போதும். குத்துவிளக்கை தேவியாக பிரதிமை செய்து, பூவும் நீரும் வார்த்து, தீபம் காட்டினாலே போதும். இருக்கின்ற நிவேதனத்தை தூ ய்மையோடு படைக்கலாம். யாராவது ஒருவருக்கு தாம்பூலமும் கொடுத்துவிட்டால், பூரண நவராத்திரி அனுட்டானத்தின் முழுப்பயனுமே கிடைத்துவிடும்.



மூலநட்சத்திரத்தன்றே சரஸ்வதியை ஆவாஹனம் செய்துவிட வேண்டியது மிக முக்கியம். விக்கிரஹ வடிவத்திலோ, புத்தகத்தின் வடிவத்திலோ சரஸ்வதி தேவியை ஆவாஹனம் செய்யலாம். பூஜிப்பதும், வழிபடுவதும் ஆத்மார்த்தமாக இருக்கவேண்டும். மனம் ஒன்றி பிரார்த்தனை புரியவேண்டும். உலகன்னையாகிய அம்மைக்கு இவ்வகையில் நாம் செலுத்தும் சிறு நன்றிதான் இது. ஏனெனில், எல்லாவற்றையும் நமக்கு கொடுப்பதே அவள்தானே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூவுலகும் சென்றுவரக்கூடிய தவ வலிமை மிக்க முனிவர் அவர். ஒருநாள் அவர் விண்ணுலகம் சுற்றிவந்தபோது, நரகத்தின்மீது அவரின் பார்வை பட்டது. தர்ம தேவனின் ராஜ்யமான அங்கே ஒரு பெரிய குன்று வளர்ந்திருப்பதை கண்டார். தர்ம தேவனிடம் அதைப்பற்றி விசாரித்தபோது ...

" முனிவரே, உங்கள் சிறு வயதில் அதிதி ஒருவரின் உணவில் விளையாட்டாக கல் ஒன்றைப் போட்டீர்கள். அந்தக் கல்தான் இப்படி குன்றாக வளர்ந்து, உயர்ந்து நிற்கிறது. நீங்கள் மோட்சம் பெறுவதற்கு முன், இங்கே வந்து இதனை உண்ண வேண்டுமென்பது விதி." என்றார் தர்மதேவன்.

முனிவர் அதிர்ச்சியடைந்து, விமோசனம் கேட்டபோது, "பூவுலகில் இதே அளவுள்ள ஒரு குன்றை நீங்கள் தின்றுமுடித்தால் போதும். இக்குன்று மறைந்துவிடும்" என்று எடுத்துரைத்தார் தர்மதேவன்.

உடனேயே பூலோகம் திரும்பிய முனிவர், தனது தவபலத்தால் பெரிய குன்று ஒன்றை உருவாக்கினார். அதனை பொடியாக்கி, நீரில் கரைத்து விழுங்கினார்.

சிலா (பாறை) நிறைந்த மலையை அதம் (பொடி) செய்து உண்டதால், அம்முனிவருக்கு 'சிலாதர்' என்ற பெயர் உண்டாயிற்று.

அந்த முனிவர் யார் என்று அறிந்தால் பக்தர்கள் துள்ளிக் குதிப்பீர்கள். ஆம், நம் கயிலையின் காவலன் நந்தியின் அப்பாதான் அவர் ..



01. நந்திதேவரின் தந்தை யார்?
02. காலங்களை கடவுள் கடப்பதெப்படி?
03. நண்பன் தந்தைக்கு சமமானவன்!
04. ஈசன் வாக்கு தவறினாரா?



ஒரு சமயம் கிருஷ்ணரும், அர்ஜுனனும் நதிக்கரையோரம் பேசிக்கொண்டே நடந்தனர். கிருஷ்ணரிடம் ஒரு கேள்வி கேட்டான் அர்ஜுனன்.

"கண்ணா, கடந்த காலம் முழுவதையும் எப்படி உன்னால் நினைவில் வைத்திருக்க முடிகிறது?.."

கிருஷ்ணரும் சிரித்துக்கொண்டே " அர்ஜுனா, பத்து ஆண்டுகளுக்கு முன்னால் இந்நேரத்தில் நீ எங்கிருந்தாய் என்று சொல்ல முடியுமா? " என்று கேட்டார்.

பதில் சொல்ல பார்த்தனுக்கு முடியவில்லை.

மீண்டும் கேட்டார் பரமாத்மா.

"நீ சுபத்திரையை திருமணம் செய்து கொண்டாயே, அந்த நிகழ்ச்சியை கொஞ்சம் சொல்வாயா? .."

அந்த விபரங்களை ஒன்று விடாமல் கூறினான் அர்ஜுனன்.

கிருஷ்ணர் அன்போடு அவனிடம் சொன்னார் ..

"அர்ஜுனா, நீ சுபத்திரையிடம் நிறைய ஆசை வைத்திருக்கிறாய். அதனால்தான் இவையெல்லாம் உனக்கு நினைவிருக்கிறது. ஒருவன் தான் நேசிக்கின்ற விஷயங்களை மறக்கமாட்டான். நேசிக்காதவற்றை மறந்து விடுகிறான். நானோ எல்லாவற்றையும், எல்லோரையும் நேசிக்கிறேன். சமமாகவே பார்க்கிறேன். அதனால், எல்லாமே எனக்கு நினைவில் இருக்கிறது .." என்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





பதினான்கு வருஷ வனவாசத்தை முடித்த பின்னர் ராமருக்கு பட்டாபிஷேகம் விமரிசையாக நடந்து கொண்டிருந்தது.

இதைக்கேள்விப்பட்டு அவரது பள்ளித்தோழன் சீனிவாசன் நிகழ்ச்சியை கண்டுகளிப்பதற்காக ஓடி வந்தான்.

மிகவும் ஏழ்மைக்கோலத்தில் இருந்த அவன் சக்கரவர்த்தி ஸ்ரீராமரை நோக்கி " அடேய் ராமா, காட்டுக்குப் போயிருந்தாயே ..!, எப்படா வந்தாய்? " என்று ஆவல் பொங்க கேட்டான்.

இப்படிக் கேட்டதும் அனைவருக்கும் கோபம் வந்துவிட்டது. ஆத்திரம் மேலிட தன் கையில் இருந்த தர்ப்பை கட்டினால் அவனை அடிக்க ஓங்கினார் வசிஷ்டர்.

எழுந்தோடி வந்த ராமர் சீனிவாசனை மார்போடு தழுவிக்கொண்டார். " நண்பா, நேற்றுத்தான் வந்தேன். உன்னைக்காணவேண்டுமென்ற ஆவலில் இருந்தேன். நீயே வந்துவிட்டாய் .." என்றார்.

பின்னர், கோபத்தில் இருந்த சபையோரிடம் வணங்கி கூறினார் .." பதினான்கு ஆண்டுகளாக இருந்த ஒரு கவலை எனக்கு இன்றுதான் தீர்ந்தது. மாமுனிவர் வசிஷ்டர் உட்பட எல்லோருமே என்னை 'ராகவா', 'ரகுநாதா', 'வைகுந்தா' என்றுதான் கூப்பிட்டார்கள். என் அப்பா ஒருவர்தான் 'அடேய் ராமா ..' என்று ஆசையோடு அழைத்தார். அந்த குறையை எனது நண்பன் தீர்த்துவிட்டான்."

என்றவாறு சீனிவாசனை மீண்டும் ராமர் அணைத்தபோது கண்ணீர் விட்டனர் சபையோர்.

காலனை காலால் உதைத்தாரே சிவபெருமான் .., இது சரியா?

'மார்க்கண்டேயருக்கு 16 வயது என குறிப்பட்டவர் அவர்தானே! அப்படியிருக்க, தன் கடமையை செய்ய வந்த காலனை இறைவன் கோபிக்கலாமா..' என்ற கேள்விக்கு இதோ விடை.

எமனால் வீசப்பட்ட பாசக்கயிறு மார்க்கண்டேயரால் தழுவப்பட்ட அமிர்தகடேஸ்வரர் மீது விழுந்ததும், தனது இடது காலால்தான் பெருமான் உதைத்தார். ஏனெனில், இடதுகால் அவருடையதல்லவே!

தனது வாக்கை தவறவிடாது காக்க, வலப்பாகமாகிய தானே உதைக்காமல், இடப்பாகத்தில் இருக்கும் உமாதேவியே உதைக்கும்படி ஆனது. இதனால், எமனுக்கு பாடம் புகட்ட தனது காலை (இடது) பயன்படுத்திய பொறுப்பு அம்பாளையே சார்கிறது.

காலனை உதைத்த இறைவனின் திருவடி, அதாவது இடது திருவடி தேவியின் திருவடியாகும் ..





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கௌரி விரதம் ..

நம் இந்து மங்கையரின் அதிக பட்சமான எதிர்பார்ப்பே நிறைவான இல்லற வாழ்க்கைதான். அதிலும் சதிபதி ஒற்றுமை சீராக இருந்துவிட்டால் போதும். அதற்கு மேல் சொர்க்கம்கூட அவர்களுக்கு கையளவுதான்!

எந்த நானிலங்களிலும் மாறாத இந்த உணர்வு, சகல சுமங்கலிகளையும் தமது மாங்கல்ய பலத்தில் கவனத்தோடு இருக்க வைக்கிறது ..




## உலகம் முழுதும் கௌரி விரதம்! ..

திருமணமான பெண்கள் தங்களின் மாங்கல்யம் நிலைத்து, நீடிப்பதற்காகவும் கன்னிப் பெண்கள் அழகும், ஆற்றலும் மிக்க இளைஞன் தனக்கு கணவனாக வரவேண்டுமென்றும் பார்வதி தேவியை வேண்டி பூஜைகள் செய்வது வழக்கம். இது. சைத்ர (சித்திரை) மாதத்தில் வரும். நமது 'சௌபாக்கிய கௌரி விரதம்'கூட இப்படியான ஒன்றுதான்.

இந்த அரிய விரதமும், பூஜையும் உலகம் தழுவி வாழ்கின்ற அனைத்து இந்து மங்கையரும் அனுஷ்டிக்கும் வழக்கமும், அதில் காணப்படும் பிரதேச வழமைகளும் வியக்க வைக்கின்றன ..

## ராஜஸ்தானில் கௌரி விழா!! ..

அங்கே இந்த வழிபாட்டை 'கண்கோர்' பூஜை என்கிறார்கள். ஹோலிப்பண்டிகை முடிந்ததும், கண்கோர் பூஜைக்கான ஏற்பாடுகள் விறுவிறுப்பாக ஆரம்பித்துவிடுகின்றன.

இங்கே இந்த பூஜைகள் வீட்டிலும், கோயிலிலும் சந்தடியில்லாமல் நடந்துவிடுகின்றன. ஆனால், அங்கேயோ இது ஒரு தேசிய விழா அளவுக்கு பிரதேசங்கள் கொண்டாடுகின்றன ..

நம் புலத்தில்
கௌரிவிரதம்
அறிந்த ஒன்று --
வெளியுலகத்தில்
அதன் சிறப்புகளோ
அறியவேண்டிய ஒன்று!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறு, ஏரி போன்ற நீர்நிலைகளில் கரை மணலை எடுத்து வந்து, பிசைந்து கௌரி (பார்வதி) தேவியின் உருவங்களை செய்வார்கள். பூஜைக்கான மலர்களை சேகரிக்க அங்கே உள்ள பெண்கள் செல்லும் காட்சியே வியப்பாக இருக்கும். ஆமாம், அந்த வேளையில் இவர்கள் பலவண்ண ஆடைகள் அணிந்து பூக்களை பறிக்கவேண்டும் என்பதும் நியதி. அவ்வேளையில் கையில் பித்தளைச் செம்புகளோடு அவர்கள் பாடிக்கொண்டே செல்லும் காட்சி பார்ப்பதற்கு அழகாக இருக்கும்.



## பிறந்த வீடு வரும் பார்வதி தேவி ..

கண்கோர் அன்று விரதமிருந்து, பார்வதியை வேண்டி பூஜித்துக்கொள்வர். மாலையில் நல்லநேரத்தில் தேவியின் பிரதிமைகளை அவரவர் சக்திக்கேற்ப வண்டிகளிலும், பல்லக்கிலும், குதிரை மீதும், யானைகளின் அம்பாரிகள் மீதும் ஊர்வலமாக கொண்டு செல்வர். அப்படி எடுத்துச்சென்று ஏரியில் ஜலாரோகணம் செய்வர்.

## பல்லக்கிலும், யானையிலும் பார்வதி தேவி ..

பார்வதி தேவிக்கு சீதனமாக இனிப்பு வகைகளையும் புடவை, சட்டைத்துணி, பாவாடை, பாத்திரங்கள் என்று பல பொருட்களையும் மக்கள் அனுப்பி வைக்கிறார்கள். ஊர்வலம் முடிந்ததும் இவை ஏழைகளுக்கு விநியோகிப்படுகின்றன.

## இங்கே அனுட்டிப்பதே தெரியாது .. அங்கேயோ, கோலாகலம்! ..



கண்கோர் பூஜைக்கு சில தினங்களுக்கு முன்பாகவே மண் கலயங்களில் கேழ்வரகை (பாலிகை) தெளித்து வைப்பார்கள். பூஜையன்று இவை சாண் உயரத்திற்கும் மேலாக செழித்து வளர்ந்திருக்கும். பார்வைக்கு பசுமையாக காட்சி தரும்.

மணமுடித்து கணவன் வீட்டுக்குச் சென்ற பார்வதிதேவி அன்று பிறந்த வீட்டுக்கு வருவதாகவும், அன்று வீட்டிலும், நாட்டிலும் பசுமை பொங்கிப் பூரிப்பதாகவும் இது அர்த்தம் கொள்ளப்படுகிறது.

இந்தப் பூஜையின் மிகச் சிறப்பான அம்சமே ஊர்வலம்தான். அன்று அங்கே பகல் நேரத்திற்குப் பின் விடுமுறைகள் வழங்கப்படுகின்றன. அலுவலகங்கள், பாடசாலைகள், வர்த்தக நிலையங்கள் யாவுமே ஒட்டுமொத்தமாக மூடப்பட்டிருக்கும். அந்த அளவுக்கு ஊர்வலத்தில் பங்கு கொள்ள மக்கள் ஆர்வத்தோடு காத்திருப்பார்கள். ஒவ்வொரு வீட்டிலிருந்தும் புறப்படுகின்ற பார்வதியின் பிரதிமை ஊர்வலம் நகரின் பிரதான வீதியில் தொடங்கும். அது பெரிய ஊர்வலத்தில் வந்து சங்கமிக்கும்போது, பல நதிகள் புனல் பெருகி வந்து பெரிய ஆற்றோடு சங்கமிப்பதைப்போல இருக்கும். பெண்கள் வண்ண உடைகளில் 'கூமர்' என்னும் கும்மி அடித்துப் பாடிக்கொண்டே செல்ல, ஊர்வலமும் சிறிதுசிறிதாக நகரும்போது பார்ப்பதற்கு ஆனந்தமாக இருக்கும் ..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாசிப்பு பொக்கிஷம்!




**நூல்கள் :**

**01 -- ராமாயண காட்சிகள்**

**02 -- ஷீரடி தெய்வம்**




ராமர் வனவாசம் சென்ற சமயத்தில் தசரத மன்னர் இறந்துவிடுகிறார். ராமனை மீண்டும் அழைத்து வருவதற்கும், பட்டம் சூட்டுவதற்கும் எல்லோரும் காட்டுக்கு வருகிறார்கள்.

அன்னையர்கள் மூவரையும் நோக்கி ஓடிச்சென்ற ராமன் முதலில் விழுந்து வணங்கியது கைகேயியைத்தான். தன்னை காட்டுக்கு அனுப்பிய குற்ற உணர்வு தோன்றிவிடக்கூடாதே என்ற கவனத்தோடு அன்பைக் கொட்டி அவளுடன் உரையாடினான்.

இதைப்பார்த்து எல்லோரும் ராமனுடைய பண்பை எண்ணி வியந்தார்கள்.

அடுத்ததாக லட்சுமணனின் தாயான சுமத்திரையிடம் வந்து வீழ்ந்து நமஸ்கரித்த ராமனைப் பார்த்து '' மகனே, உன் தாய் கோசலை உன்னைக்காண துடிக்கிறாள். அவளிடம் பேசப்பா ..'' என்கிறாள் சுமத்திரை.

'' அப்படியா, என் தாய் இன்னொருவரானால் என் தம்பியர்களும், நானும் வேறன்றோ! நான் அவர்களோடு இருக்கும்வரை எமக்கு தாய்மார்களும் ஒருவர்தான் ..'' என்றான் ராமன்.

இதைப்பார்த்த கோசலைக்கு இதுவரை ராமனைப் பிரிந்த அத்தனை துன்பமும் பறந்து போனது. அவளின் மனமும், வயிறும் குளிர்ந்தது.

ஷீரடி சாயிபாபா அடிக்கடி 'அல்லா மாலிக்' என்று சொல்லிக்கொள்வார். அதன் பொருள் --'கடவுள்தான் எஜமானன்' என்பதாம். தன்னை கடவுளின் தொண்டனாகவே எண்ணி வாழ்ந்தார். ஆனால் அவரிடமிருந்து தோன்றிய அற்புதங்களை கண்டு அதிசயித்த மக்கள் அவரை கடவுளாகவே ஏற்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூஜையறையில் ..

நமது வீட்டில் மிகவும் முக்கியமான பகுதி பூஜையறை என்பதில் சந்தேகமில்லை ..

அதனை சுத்தமாக வைத்திருக்க வேண்டியதும், அதற்குரிய விதிகளை பேணவேண்டியதும் அவசியம் --

சுவாமி படங்கள், சிறிய விக்கிரகங்கள் மிக குறைந்த அளவில் இருக்க வேண்டும். மறைந்த குடும்பத்தவர்களின் படங்களோடு இருத்தல் கூடாது. படங்களை கிழக்கு நோக்கி வைக்கவேண்டும். வசதியில்லையேல் வடக்கு நோக்கியும் வைக்கலாம்.

பூஜை அறையில் விக்கிரகங்கள் வைத்து வழிபடுவதாயின் மிகக்குறைந்த உயரமுடையவற்றையே வைத்து வணங்க வேண்டும். பெரிய அளவில் வைக்க விரும்பினால் அவற்றை முறைப்படி அபிஷேகம் செய்தே பூஜிக்க வேண்டும்.

துர்க்கை, காளி போன்ற உக்கிர கடவுள்களின் படங்களை பூஜை அறையில் வைக்க கூடாதென்கிறது சாஸ்திர நூல்கள்.

# வணங்கும் திசைகளால் ..

கிழக்கு முகமாக வணங்கினால் தினசரி நன்மைகளுண்டு. அக்னிமூலை என்னும் தென்கிழக்கு திசை நோக்கி வணங்கினால் நோய் வராது.

தெற்கு நோக்கி வணங்கினால் வெல்ல முடியாத பல தீமைகள் வரும்.

தென் மேற்கு திசை நோக்கி வணங்கினால் கொடிய வறுமைக்கு இழக்காகலாம்.

மேற்கு திசை நோக்கி வணங்கினால் சேர்த்து வைத்த செல்வம் வீணாகும். வட மேற்கு திசை நோக்கி வணங்கினால் பேய், பிசாசு, பில்லி, சூனியம் விலகும். வடக்கு திசை நோக்கி வணங்கினால் பொன் பொருள், கல்வி, ஆரோக்கியம் கிடைக்கும்.

ஈசான திசை எனப்படும் வடகிழக்கு நோக்கி வணங்கினால் முக்திப்பேறு கிட்டும்.



நவராத்திரி சிறப்பிதழ் காரணமாக ..

**திருவாசக தெய்வீக தொடர் ..**

**தர்ம சாஸ்திரம்**



**இந்த இரண்டு தொடர்களும்**
**இம்முறை இடம்பெறவில்லை.**
**அடுத்த இதழில் வரும்.**



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



## மன்னார் சிவபூமியில் ராஜராஜேஸ்வரியின் மகோற்சவம்!..

உப்புக்குளம் ஸ்ரீ ராஜராஜேஸ்வரி அம்பாள்! ..

மன்னார் நகர் கொண்ட அழகுறு தலம் இது. நிக்கின்ற திருக்கோலத்தில் பேரொளி சிந்தும் இந்த அம்மனின் தரிசனம் என்பது பிறவிப்பயன் தரும் ஒன்று..

மன்னார் நகரின் உப்புக்குளம் கிராமம் என்றாலே, யாருடைய நினைவுக்கும் முதலில் வருவது இந்த அம்மன் சந்நிதிதான். அருகே பிரம்மாண்டமான குளக்கரை. கரையிலே அம்சம் பொங்க நீண்டு செல்லும் சுற்றுமதில். உள்ளே உலகையே கட்டியாளும் சக்தி பரிபாலனம் நடக்கிறது. கையிலே சூலம் பாவங்களை அதம் செய்ய, கண்ணிலே கருணை காந்தம்போல வரவழைக்க அத்தனை மன்னார் வாசிகளுக்குமே இந்த அம்பாள் ஒரு சொந்தக்காரியாக உறவாடுகிறாள். முக்கியமாக கிராமத்தின் காவல் தெய்வமும் இவளே ..

அமைதியின் உறைவிடமாக விளங்கும் சூழலில் பன்னெடுங் காலமாக வாசம்புரிந்து வருகின்ற இந்த அன்னையின் அருள்நாடி வருபவர்களின் நம்பிக்கை வீண்போவதே இல்லை. குறிப்பாக தாய்க்குலங்களின் தவிப்பறிந்து சடுதியாய் உதவிடும் தயாளவதியாம் இந்த ஸ்ரீ ராஜராஜேஸ்வரி! இங்கே மாபெரும் வருடாந்த மகோற்சவம் விமரிசையாக நடந்தேறி சிலநாட்கள்தான் ஆகிறது. அந்த மகோற்சவத்திலே கண்ட, கேட்ட, தரிசித்த, பூரித்த சக்தி அமிர்தங்களுக்கு ஈடினையே கிடையாது. அப்படியாக களைசொட்டிய திருவிழா நாட்கள் அவை.



அந்த இன்பக்களைப்பில் ஓய்வெடுக்கும் அம்பாள் அடியார்களுக்காக அம்பிகையின் நாமத்தின் தனித்தன்மைகளை இங்கே தருகிறோம் ....

ஸ்ரீ ராஜராஜேஸ்வரியைப்பற்றிய எட்டு ஸ்லோகங்களும் அழியாச்செல்வம், அந்தஸ்து, புகழ், பதவி, நோயற்ற வாழ்வு, உயர் கல்வி ஆகியவற்றை அளிக்கவல்லதாகும். ஸ்ரீ ராஜராஜேஸ்வரி என்ற அஷ்டகத்தின் பொருள் -- எல்லா கடவுள்களுக்கும் ராணியானவள், சர்வ வல்லமை பொருந்தியவள், எல்லா இடங்களிலும் வியாபித்துள்ளவள். எட்டு ஸ்லோகங்களும் 'அம்பா' என்றே ஆரம்பிக்கின்றன. அம்பா என்றால் தாய், எல்லா உலகிற்கும் தாய். ஒவ்வொரு ஸ்லோகத்தின் கடைசி பாதம் பார்வதி தேவியை எல்லோருக்கும் மேம்பட்டவள், சேதாநாரூபி, சகல ஐஸ்வர்யம் படைத்தவள், தேவதைகளுக்கெல்லாம் ராஜ ராஜேஸ்வரி என்று கூறி முடிக்கிறது. எல்லா ஸ்லோகங்களும் ஆதி பராசக்தியின் பல அவதாரங்களையும் குறிப்பவையே ..

இப்படிப்பட்ட தெய்வம் நமக்கு மிக அருகிலேயே! என்னே பாக்கியம்!.

## மங்கள ஆரத்தி

சைவ சமயத்தின் சடங்குகள் ஒவ்வொன்றும் அர்த்தம் கொண்டவை. தோஷ நிவர்த்திகளை தருபவை.

மங்கள ஆரத்தியும்கூட அவற்றில் ஒன்று.

ஐந்து வகையான பொருட்களால் மங்கள ஆரத்தி கரைக்க வேண்டும். அவை : --

| | | |
|---|---|---|
| மஞ்சள் தூள் | -- | பிருத்வி தத்துவம் |
| வெண் சுண்ணாம்பு | -- | அப்பு தத்துவம் |
| மிளகாய் சிகப்பு | -- | தேஜோ தத்துவம் |
| வெற்றிலை பச்சை | -- | வாயு தத்துவம் |
| கறுப்பு கரி | -- | ஆகாய தத்துவம் |





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மாணவர் சமய அறிவுப்போட்டி
## இல: 14

இதுவரையில் பங்கு பற்றிய மாணவர்கள் அடுத்த இதழில் பிரசுரமாவார்கள்!

அன்பான மாணவர்களே,

சமய அறிவை ஊட்டும் வண்ணம் இந்த 'பக்தி விஜயம் ..' வெளிவருகிறது. இது உங்களுக்கும் வழிகாட்டியாக திகழ்கிறது. பரீட்சைகளில் புள்ளிகள் பெறுவதற்கு மட்டுமல்ல, வாழ்க்கையிலும் வெற்றிபெறுவதற்கு சமயத் தகவல்கள் மிக அவசியம்.

இல: 12 சமய அறிவுப்போட்டியில் பெருமளவில் நீங்கள் பங்கு பற்றியிருந்தீர்கள். அனைவரையும் பாராட்டுகிறோம் ..

### இல: 12 போட்டிக்கான விடைகள் ..

**01. கௌரி அம்பாள், 02. யாழ்ப்பாணம், 03. முருகன், 04. வருணன், 05. கண்ணீர், 06. மாரீசன், 07. கிருஷ்ணர், 08. அர்த்தநாரீஸ்வரர், 09.நெல்லிக்கனி, 10. இளங்கோ**

- 1ம் பரிசு : ச. ஜனனி, யா - தும்பளை சிவப்பிரகாச வித்தியாலயம்
- 2ம் பரிசு : மா. நாகதர்சிகன், யாழ்ப்பாணக் கல்லூரி, வட்டுக்கோட்டை
- 3ம் பரிசு : ச. சுலக்சனா, யா - சாவகச்சேரி இந்துக்கல்லூரி

### இம்மாத வினாக்கள் -- இல: 14

01. மோதகப்பிரியன் என்று அழைக்கப்படுபவர் ..................... ஆவார்
02. நவராத்திரியின் பத்தாவது நாள் ............................ ஆகும்
03. ஆணவம், ................., மாயை என்பது மும்மலங்கள் எனப்படும்
04. .................மாத சனியில் எள், எண்ணை சனி பகவானுக்கு ஏற்றுவர்
05. துஷ்யந்தன் கணையாழியை ....................... இடம் கொடுத்தான்
06. கனிகளால் செய்யப்படும் அபிஷேகம் ....................... எனப்படும்
07. கோதண்டம் என்ற வில்லை ஏந்தியிருப்பவர் .........................
08. வாணி பூஜையில் பாடப்படுவது ....................... மாலை
09. 'ஈசன் எந்தை ....................... நிழலே ..'
10. பாரதப்போர் நடந்த இடத்தின் பெயர் ................

*சரியான விடைகளை எழுதி அனுப்புகின்ற மாணவர்கள், குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்டு பரிசளிக்கப்படுவார்கள்.*

அனுப்பவேண்டிய முகவரி :

ஆசிரியர்,
"பக்தி விஜயம் ."
555, புதுத்தெரு,
மன்னார்.

**(இப்பக்கத்தை கத்தரிக்க வேண்டாம் .. வேறு பேப்பரிலேயே எழுதி அனுப்பவும்.)**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாணிவிழாக்காலம்...!!..

மாணவர் பகுதி

# வெற்றியின் ரகசியம்!



வாணி விழா பட்டி தொட்டியெல்லாம் களை கட்டப் போகிறது ..

'மழைக்குக்கூட பள்ளிக்கூடப் பக்கம் ஒதுங்கவில்லை ..' என்று கூறிக்கொள்பவர்கள் உட்பட சகலரும் சரஸ்வதி பூஜையிலே மூழ்கி ஆனந்தமடையும் நாட்கள் இவை. கலைமகளுக்கு விழா என்றாலே அது மாணவர்களுக்குத்தான் அதிக கொண்டாட்டம்.

இந்நேரத்தில் நாமும் நமது மாணவச்செல்வங்களை படிப்பில் உஷார் படுத்தலாம் என்று, நவராத்திரி ஸ்பெஷ்'லாக ஒரு புராண 'டிப்ஸை' தருகிறோம் ..

துரோணரின் குருகுலத்தில் பாண்டவர்களும், கௌரவர்களும் வில்வித்தை பயிலும்போது பாண்டவர்களே திறமைசாலிகளாக இருந்தனர். அவர்களின் முன்னேற்றத்தைக் கண்டு துரியோதனன் குருவை சந்தேகித்தான். தமது குருநாதர் பாண்டவர்களிடம் தனி அக்கறை காட்டுவதாக எண்ணி குமுறினான்.

இதனை பாட்டனாகிய பீஷ்மரிடம் முறைப்பாடு செய்தான். அவரும் துரோணரை சந்தித்து கௌரவர்களின் மனக்குறையை கூறினார். இதைக்கேட்டு வருந்திய துரோணர், "பிதாமகரே, இளைய தலைமுறையினரிடம் நான் எந்த பேதத்தையும் காட்டுவதில்லை. அனைத்து மாணவர்களையும் சமமாகவே பயிற்றுவிக்கிறேன் .. கற்றுக்கொள்ளும் ஆர்வமுள்ள மாணவர்கள் விரைவாக முன்னேறுகிறார்கள். அவ்வளவுதான் .." என்றார்.

இருப்பினும், அனுபவத்தின் வாயிலாக இதனை பீஷ்மருக்கு உணர்த்த விரும்பினார்.

## உலகின் மிகச்சிறந்த மாணவன்!



எந்த விஷயத்திலும் கூர்மையான பார்வை,
கற்றுக்கொள்ளும் ஆர்வம்,
பாடங்களில் அதீத கவனம் --
இவையே சிறந்த மாணவருக்கு இலக்கணம்!
உலகின் மிகச்சிறந்த மாணவனான
அர்ஜுனனை பின்பற்றினால் புள்ளிகள் நிச்சயம்!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியரின் அன்பும் மாணவரின் ஆற்றலும்!

ஒருநாள் தன் சீடர்களோடு ஆற்றங்கரைக்கு குளிப்பதற்காக செல்லும்போது பீஷ்மரையும் உடன் வருமாறு வேண்டினார் துரோணர்.

பீஷ்மரும், துரோணரும் முன்னால் நடக்க கௌரவரும், பாண்டவரும் பின்னால் வந்துகொண்டிருந்தனர். சிறிது தூரம் நடந்ததும் துரோணர் திரும்பி,

''அர்ஜுனா, எண்ணைக் கிண்ணத்தை மறந்துவிட்டேன். ஆசிரமம் சென்று அதனை எடுத்து வா!..'' என்றார். அர்ஜுனனும் திரும்பி ஆசிரமத்தை நோக்கி ஓடினான்.

தொடர்ந்து அனைவரும் ஆற்றை நோக்கி நடந்தபோது, வழியில் ஒரு ஆலமரம் இருக்கவே அதன் நிழலில் பீஷ்மரும், துரோணரும் ஒரு கல்லில் அமர்ந்தனர். மாணவர்கள் சுற்றிலும் தரையில் அமர்ந்தனர். அர்ஜுனன் வந்து சேர்வதற்குள் ஒரு புதிய பாடத்தை நடத்த விரும்பினார் குருதேவர்.

குனிந்து, ஒரு அஸ்திர பிரயோக மந்திரத்தை தரையில் எழுதினார். பின்னர் மாணவர்களிடம், '' இந்த மந்திரத்தை மனதில் தியானித்து, ஒரு அம்பு எய்தினால் இந்த மரத்தில் உள்ள அத்தனை இலைகளிலும் துளைகள் ஏற்படும் ..'' என்றார்.

மாணவர்களும் முயன்றனர். மந்திர உச்சரிப்போ, குறியோ தவறி ஒவ்வொருவரும் தோற்றனர். கடைசியில் துரியோதனன் முயன்றபோது வெற்றி கிடைத்தது. அவன் மந்திரம் தியானித்து எய்த அம்பு மரத்திலிருந்த அனைத்து இலைகளையும் துளைத்தது.



இதைப்பார்த்த எல்லோரும் கைதட்டி பாராட்டினர். பீஷ்மரும் துரியோதனனை வாழ்த்தினார். இதனால் அவன் மகிழ்ச்சியும், பெருமிதமும் கொண்டான்.

''சரி, நாம் நீராடச் செல்வோம் .. அர்ஜுனன் எண்ணையுடன் ஆற்றங்கரைக்கு வந்து சேரட்டும் ..'' என்றபடி துரோணர் எல்லோரையும் அழைத்துச் சென்றார்.

பின்னாலேயே அர்ஜுனனும் எண்ணைக் கிண்ணத்துடன் வந்து சேரவே, அனைவரும் நதியில் நீராடினர். நீராடிவிட்டு அங்கிருந்து கிளம்பியவர்கள் திரும்பும் வழியில் அதே ஆலமரத்தடியில் வந்து இளைப்பாறினர். அப்போது நிமிர்ந்து மரத்தைப் பார்த்தபோது எல்லோரும் திகைத்தனர். காரணம், மரத்திலிருந்த எல்லா இலைகளிலும் இரண்டாவது துளை போடப்பட்டிருந்தது.

பீஷ்மருக்கோ தலை சுற்றியது.

'' துரோணரே, துரியோதனன் அம்பெய்து துளையிட்ட இலைகளில் இரண்டாவது துளை எப்படி வந்தது? '' என்று கேட்டார்.

துரோணரும் குழப்பத்துடன் ''இது யாருடைய வேலை? '' என்று மாணவர்களை விசாரித்தார்.

''அடியேன்தான் ..'' என்று பணிவோடு முன்னால் வந்தான் அர்ஜுனன். திகைத்த பீஷ்மரும், ''இந்த வித்தையை துரோணர் கற்றுக்கொடுத்தபோது நீ இங்கே இல்லையே, பிறகெப்படி உனக்கு தெரிந்தது? ..''என்று கேட்டார். அதற்கு அவன் சொன்ன பதில் ..

''தாத்தா, நான் எண்ணைப் பாத்திரத்துடன் இந்த இடத்திற்கு வந்தபோது நீங்கள் இருந்து சென்ற தடங்களைப் பார்த்தேன். கூடவே, ஒரு மந்திரமும் தரையில் தெரிந்தது. மரத்திலிருந்த இலைகளில் துளைகளும் தெரிந்தன..''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



" இரண்டுக்கும் ஏதோ தொடர்பு இருப்பதுபோல பட்டது. உடனே அந்த மந்திரத்தை உச்சரித்து அம்பு தொடுத்தேன். என் ஊகம் தவறவில்லை. நான் விட்ட அம்பு எல்லா இலைகளையும் துளைத்தது..." என்றான்.

உடனே அவனைக் கட்டித்தழுவினார் பீஷ்மர். அனைவரும் அர்ஜுனனின் சாதுர்யத்தை பாராட்டியபோது துரியோதனன், "இதென்ன பிரமாதம், இது ஏற்கனவே நான் செய்ததுதானே.." என்றான்.

இதைக்கண்ட துரோணர் சிரித்தவாறு, "நல்லது, துரியோதனா எங்கே.. மீண்டும் முன்புபோல் துளையிடு பார்க்கலாம்!" என்றார்.

"இதோ .." என்றவாறு வில்லை உயர்த்தியபடி மந்திரம் எழுதியிருந்த இடத்தைப் பார்த்தான் துரியோதனன். ஆனால் அந்த இடத்தில் மந்திரம் இருக்கவில்லை. அது அழிக்கப்பட்டிருந்தது கண்டு அதிர்ந்தான்.

பவ்வியமாக மீண்டும் பதில் சொன்னான் அர்ஜுனன். "தரையில் எழுதப்பட்டிருக்கும் மந்திரத்தை யாரும் மிதித்துவிடக்கூடாதே என்று நான்தான் அதனை அழித்துவிட்டேன் .."

மந்திரத்தை மனதில் பதிய வைக்கத்தவறியதை எண்ணி வெட்கப்பட்டான் துரியோதனன்.

ஒருமுறைக்கு மேல் மனனம் செய்யும் வழக்கம் அர்ஜுனனுக்கு இல்லை என்பது துரோணருக்கும் தெரியும். சிலையாய் நின்ற பீஷ்மரின் பக்கம் திரும்பினார்

"பீஷ்மரே, இப்போது கூறுங்கள். என்மீது தவறு உண்டா? .."

சொல்வதறியாத நிலையில் துரோணரை கட்டித்தழுவினார் பிதாமகர். அந்தத் தழுவலில் இருந்த வேதனையை துரோணரும் உணர்ந்தார்.

**ஒருமுறைக்கு மேல் பாடங்களை மனனம் செய்யாத அர்ஜுனன் மாணவ உலகத்திற்கு எடுத்துக்காட்டு ..**

## தெய்வீக சந்தேகங்கள்..

**சுவாமிக்கு போட்ட மாலையை தருகிறார்களே! அதனை என்ன செய்ய வேண்டும்?**

ஆலயத்தில் தெய்வத்திற்கு சாத்திய மாலையை நமது வீட்டில் சுவாமிப் படங்களுக்கோ, வீட்டு வாசலுக்கோ, வாகனங்களுக்கோ போடுவது முறையல்ல.

சுவாமிக்கு சாத்திய மாலையை நாம் வாங்கிவர நேர்ந்தால் அதனை பூச்செடிகள் மீதுதான் போட வேண்டுமென்கிறது சமய நூல்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நலம் தரும் யோகா

தொடர் -- 14

ஆரோக்கிய வாழ்வு



## 28 -- கோணாசனம்

செய்யும் முறை :

கால்களை அகட்டி நின்றுகொண்டு, கைகளை கும்பிட்ட நிலையில் தலைக்குமேல் உயர்த்தி, ஒவ்வொரு பக்கமாக சரியவும். பக்கவாட்டாகவும், முன்பின்னாகவும் செய்து வரவும்.

பலன்கள் :

விலா எலும்புகள் பலமடையும். கப நோய், இடுப்பு வலி என்பன தீரும். பெண்களுக்கு சிறப்பான பயன்களை தரும். சள்ளை வைக்காது. சிற்றிடையாய் இருப்பார்கள்.



நன்றி :
அஷ்டாங்க யோகி
நா. குலசிங்கம் அவர்கள்

## 29 -- உட்டியாணா

செய்யும் முறை :

முழுச்சுவாசத்தையும் வெளியே விட்டு வயிற்றில் காற்றில்லாமல் இருக்கும் நிலையில் முடிந்த அளவு வயிற்றை உள்நோக்கி எக்கி வைத்திருக்கவும். இருபது வினாடிகள் மூச்சை அடக்கி வைத்து, மெதுவாக காற்றை வெளியே விடவும். அடுத்த தடவை மீண்டும் மூச்சை விட்டு வயிறை எக்கவும். முடிந்த அளவு அடக்கி வைத்திருக்கவும்.

பலன்கள் :

வயிற்றுப்பகுதி உள்ளுறுப்புகள் வீரியமடையும். விந்து கட்டிப்படும். சுவாசத்தினால் உட்கொள்ளப்பட்ட பிராண சக்தியானது தேக்கி வைக்கப்படுகிறது. குடல் புண், அல்சர், வயிற்று வலி என்பன தீரும். ஜீரண சக்தி அதிகரிக்கும். இளமை மேலிடும். சொப்பன ஸ்கலிதம் நீங்கும். குண்டலினி சக்தி மேல்நோக்கி எழவும் உதவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மாதங்களை அறிவீர்! மனம்போல வாழ்வீர்!!..

## புரட்டாதி மாதத்திலே புண்ணியங்கள் சேருமே! ..



இந்த அருமையான மாதத்தை 'கன்னிமாதம்' என்றும் செல்லமாக பெயரிட்டு அழைப்பர் ..

காரணம், சூரியன் இந்த மாதத்தில் கன்னி ராசிக்கு வந்துவிடுகிறது!

''கன்னித்திங்கள் வருகுது ஐயா,
காசு பணம் சேர்க்க வேண்டும் ..''

என்று வீடுகள்தோறும் பாடிக் கோலாட்டம் போடுவார்களாம். இப்பாடலைப் பாடியவாறு பாடசாலைக்கு பொருள் சேர்ப்பதை சிறுவயது அனுபவமாக இன்றும் பலர் நினைப்பதுண்டு ..

இன்று பன்னிரண்டு ராசி மண்டலங்களைக் கொண்டு விளங்கும் ராசிகள் அக்காலத்தில் அப்படியிருக்கவில்லை. அப்போது எட்டு ராசிகளைக் கொண்டு மட்டுமே ராசி மண்டலம் விளங்கியது. இதில் முக்கிய இடத்தை வகிப்பது கன்னி ராசியாகும். வேதங்களுள் முதலிடம் வகிக்கின்ற இருக்கு வேதம்கூட இதனை ஏற்றுக்கொள்கிறது.

### நவராத்திரியின் நுழைவாயில்! ..

கன்னி மாதமாகிய இக்காலத்தில் தேவி வழிபாடு வரும் பொருத்தத்தை நினைக்கையில் ஏற்படுகின்ற ஆனந்தமே தனி. நாடு நகரமெங்கும் சக்தி வழிபாடு களை கட்டும். 'வெள்ளைத் தாமரைப் பூவிலிருப்பாள் ..' என்ற கலைமகளின் துதிப்பாடல்கள் பட்டி தொட்டியெல்லாம் ஒலிக்கும்..

இந்த வழிபாடு எப்போது இவ்வுலகத்தில் தோன்றியது என்ற கேள்விக்கு பதில் கூறமுடியாது. அவ்வளவு தொன்மை வாய்ந்தது இது. வட இந்தியாவில் 'தசரா' என்று பெயரிட்டு கொண்டாடும் இந்த வழிபாடு பெரும் பண்டிகையாக கோலாகலமுறும். மைசூரிலும், வங்காளத்திலும் இந்த விழா கொண்டாடப்படும் வேளைகளில் முழு இந்தியாவின் கவனமே இங்கு குவிந்துவிடும்.

பண்டைய பூஜைகளில் மிகச்சிறந்ததாக விளங்கும் இதனை மதவேறுபாடுகளைக் கடந்து கொண்டாடுபவர்கள் அநேகர். இன்னும் சொல்லப்போனால், சிற்சில பெயர் மாற்றங்களுடன் இந்த சக்திவழிபாடு உலகம் முழுவதுமே பரவியிருந்திருப்பதையும் அறிய முடிகிறது.

### ஒரு சிவராத்திரியும், ஒன்பது நவராத்திரியும்! ..

புரட்டாதி மாதத்தில் வருகின்ற அமாவாசையைத் தொடர்ந்துவருகின்ற ஒன்பது நாட்களும் நவராத்திரியாகும். பத்தாவது விஜயதசமியாகும். எம்பெருமான் சிவனுக்கு உகந்த சிவராத்திரி ஒரு ராத்திரியிலேயே முடிந்துவிடுகிறதென்றால், அம்பிகைக்குறிய நவராத்திரியோ ஒன்பது நாட்களுக்கு நீடிக்கிறது. சக்தி வழிபாட்டின் மேன்மைக்கு இது சான்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆயுத பூஜை!

மகிஷாசுரனை அழித்ததன் மூலம் தேவி நமக்குச் சொல்லும் செய்தி என்ன? ..

'மகிஷம்' என்றால் தாமச குணமாகும். தாமச குணம் என்ற அரக்கனை நமக்குள்ளே அழித்து, சாத்வீக குணத்தை நமக்கு அருள்வதாகவே இந்த மகிஷாசுர வதத்தை விஜயதசமியிலே ஆதிபராசக்தி நடத்துகிறாள். ஆதலால், இத்தினத்தின் மேன்மையை வர்ணிக்க வார்த்தைகள் போதாது.

இப்புனித நாளில் சகல ஆயுதங்களுக்கும், கருவிகளுக்கும் ஓய்வு வழங்கி அவற்றுக்கு பூஜை செய்வர். இதனையே 'ஆயுத பூஜை' என்றும் அழைப்பர்.

புதிய தொழில்கள், கலைகள், முதலீடுகள், முயற்சிகள் யாவுமே இத்திருநாளில்தான் ஆரம்பிக்கப்படும். கல்வியை தொடங்க இருக்கும் சிறார்களுக்கு இத்தினத்திலேயே வித்தியாரம்பம் நிகழும். இதனையே 'ஏடு தொடக்குதல்' என்றழைப்பர்.

நவராத்திரி நிறைவும், விஜயதசமியும் சேர்ந்த இந்த நாளில் எந்த மனதிலும் குறை இருக்காது. ஆனந்தமும், தன்னம்பிக்கையும் பெருக்கெடுக்கும்.



## கன்னி மாதம் — தெரியுமா? ..

## வெற்றியின் ரகசியம் .. விஜயதசமி!! ..



நவராத்திரியில் வருகின்ற அஷ்டமி மஹாஷ்டமி என்றும், நவமி மஹாநவமி என்றும் பெயர் குறிப்பிடுவர். இதனாலேயே இதனை மஹாநோன்பு என்றும் மகர் நோன்பு என்றும் அழைப்பர். சரத்கால் சம்பந்தம் பெற்ற ஆச்வின மாதத்தில் வருவதால் இதற்கு சாரத நவராத்திரம் என்றும் பெயருண்டு. இதுபோல் சித்திரை மாதத்தில் வசந்த நவராத்திரம் கொண்டாடப்படுகின்றது. பருவகாலங்களாகிய சரத்து, வசந்தம் இரண்டும் எமனுடைய கோரைப்பற்கள் என்றும் வர்ணிக்கப்படுகிறது. இக்காலங்களில் நோய்நொடிகள் பெருகி மக்கள் பெரிதும் துன்புறுவர். இதனாலேயே இக்காலத்தில் நடத்தப்படுகின்ற தேவிபூஜைகளால் மக்களைக் காக்கலாம் என்று அம்பிகை புராணம் கூறுகிறது ..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழரின் வளமும், பெருமையும் தாங்கி நிற்கின்ற மண்ணை 'நிலமகள்' என்பார்கள். இதைப்போலவே செல்வத்தை திருமகள் என்றும், கல்வியை கலைமகள் என்றும், வீரத்தை திருமகள் என்றும் குறிப்பிட்டு வணங்குகிறார்கள். இதனை மூன்றுநாள் வழிபாடாக வகைப்படுத்தி ஒன்பது நாட்களிலும் நோன்பிருந்து பூஜிக்கின்றார்கள். மும்மூன்று இரவுகளாக மூன்று தேவியரும் தோன்றி ஒன்பது இரவுகளிலும் உலகத்தை ரட்ஷிக்கிறார்கள். வீரம், செல்வம், கல்வி இம்மூன்றும் இல்லாமல் உலக மாந்தரால் வாழமுடியாது என்பதால், இதனை வேண்டி மேற்கொள்ளப்படுகின்ற இந்த வழிபாடு அதி சிறப்பானது. முதல்மூன்று நாட்களும் வீரத்தை வேண்டி துர்க்கைக்காகவும், அடுத்த மூன்று நாட்களும் செல்வத்தை வேண்டி இலட்சுமிக்காகவும், கடைசி மூன்று நாட்களும் கல்வியை வேண்டி சரஸ்வதிக்காகவும் நவராத்திரி அனுஷ்டிக்கப்படுகின்றது. பத்தாவது நாளின் சிறப்புக்கு எல்லையே இல்லை. வெற்றித்திருநாள் என்று அனைவராலும் விரும்பப்படும் இந்நாளே விஜயதசமி ஆகும். அன்பே உருவான தேவி, பராசக்தியாக தோன்றி கொடூரமான மகிஷாசுரனை வதைத்த நாள் இதுவே!

## மாதுங்களை அறிவீர்! மனம்போல வாழ்வீர்!!..





## விஜயதசமியிலே வன்னிமர பூஜை!



ராஜ குடும்பத்தவர்கள் விஜயதசமியிலே வன்னி மரத்தடிக்குச் சென்று அம்மரத்தை பூசை செய்வார்கள். இந்நிகழ்ச்சியை தழுவியே அன்றைய தினத்தில் அம்பு போடும் உற்சவம் இடம்பெறுகிறது. பாவங்களையும், சத்துருக்களையும் அழிக்கக்கூடிய சக்தி வன்னி மரத்திற்கு உண்டாம். இன்னும் ஒருபடி மேலே போய் துர்க்கையின் அம்சமாக வன்னி மரத்தை வர்ணிப்பார்கள்.

அஞ்ஞாத வாசத்தின்போது பாண்டவர்கள் தங்களின் ஆயுதங்களை வன்னி மரத்தடியில் மறைத்து வைத்திருந்தனர். போரின்போது அவைகளை எடுத்து சண்டையிட்டு வெற்றியடைந்தனர்.

வங்க மொழியிலே ராமாயணத்தை எழுதிய கிருத்தியவாய் என்ற கவி, இராவணனைச் சங்கரிக்க ஸ்ரீராமபிரான் சக்தியை வழிபட்டிருக்கிறார். அதன்பொருட்டே வங்கதேசத்தில் நவராத்திரியை கொண்டாடுகின்றனர் என்றும் கூறப்படுவதுண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தரணியெங்கும் கலைகள் பொங்கும்**

**தருணமிது ..**

நவராத்திரி என்றாலே கொலுவும், பொம்மைகளுமே மனக்கண்ணில் தோன்றும். ஆனால் இந்த கலையழகை இல்லங்களில் நிறைக்கும் வழக்கம் நம் நாட்டில் மிகவும் அரிது. இதைத்தவிர பெரும்பாலும் சிறப்பாகவே நவராத்திரி இங்கே அனுஷ்டிக்கப்படுகிறது. சக்தி வழிபாட்டில் கொலு வைக்கும் வழக்கம் தொன்றுதொட்டு நடந்து வருகிறது. இப்பண்டிகை பிரதிபலிக்கும் முக்கிய அம்சமே கலையார்வத்தை வெளிப்படுத்துவதுதான். இந்திய மாநிலங்களில் விதவிதமாக கொண்டாடப்படுகின்ற இவ்விழாவில் கலைஞர்களின் பிரசன்னம்தான் அதிகளவில் காணப்படும். பஞ்சாப், உத்தரப்பிரதேசம் ஆகிய பிரதேசங்களில் ராம லீலையும், வங்காளத்தில் காளி பூஜையும், மைசூரில் சாமுண்டீஸ்வரி வழிபாடும் மிகவும் பிரபலம் மிக்கவை. ஒன்பது இரவுகளில் சக்தியாக அருள்பாலித்த அன்னை, பத்தாம் நாளில் சிவத்தில் இணைந்து அர்த்தநாரீயாகிவிடுகிறாள் ..

**வீடுகளில் கொலு வைத்து வணங்குவது நம் நாட்டில் குறைவென்பது கவலைக்குறியது ..**



**நதிகளிலிருந்து ஒன்பது கன்னிகள்! ..**



**நவராத்திரி அற்புதங்கள்!**



ஸ்ரீராமபிரானின் மூதாதையரில் வந்த ஒருவரே இந்த விழாவை அனுஷ்டித்திருக்கவேண்டும் என்றும் ஒரு ஐதீகமுண்டு. ஒரு அமாவாசை இரவில் ஆரம்பித்து, பாரதத்தின் புண்ணிய பூமியில் ஓடும் ஒன்பது நதிகளிலிருந்து ஜலத்தை ஒன்பது குடங்களில் சேகரித்து வந்து, அவைகளில் தேவியின் ஒன்பது அம்சங்களை ஆவாஹனம் செய்து, ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு கன்னிப்பெண்ணாய் தேவியை புஜித்து வந்துள்ளார்.

சரஸ் என்றால் நீர் என்றும், ஒளி என்றும் அர்த்தம் உளதாம். ஒளியைத் தருவதால் சூரியனுக்கு 'சரஸ்வான்' என்றும் பெயருண்டு. தடையின்றிப் பிரவாகமெடுப்பதற்கு 'சரஸ்' என்று பொருளுண்டாம். தங்கு தடையியில்லாத புலமையைய் அதனால்தான் தேவி அருள்கிறாளோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யமனின் உத்தரவும், பிதுர்களின் மகிழ்வும்! ..

## மறைந்த நம் முன்னோர்களின் மாதம் இது! அனுசரித்தால் அளவற்ற ஐஸ்வர்யம்!!

மகாளயச் சிறப்புக்கு பெயர்பெற்ற மாதம் இந்த புரட்டாதி மாதம். பெரிய அளவில் இருப்பை தருவது -- அல்லது, சந்தோஸம் தருகின்ற காலம் என்பது இந்த மகாளயத்தின் பொருள். மேன்மைக்குறிய நம் பித்ருக்கள் பூமிக்கு வந்து பதினைந்து நாட்களுக்கு நம்முடன் இருப்பார்கள் என்று நம்பப்படுகிறது. இக்காலமானது இங்கே அவர்களின் இருப்பிடமாதலால் மகாளயம் என்ற அர்த்தமும் ஏற்படுகிறது. சூரியன் கன்னி ராசியில் புகுந்தபோது, ஆஷாடம் முதலாக ஐந்தாவது அமர பட்ஷம் வரை யமதர்மராஜன் தன்னிடமுள்ள பிதுர்க்களை பூமிக்குச் செலலும்படி உத்தரவிடுகிறார். அதன்படி பிதுர்க்கள் வந்த அந்த பதினாறு நாட்களுமே மகாளய விதிப்படி அன்ன சிரார்த்தம் செய்யவேண்டும். அல்லது ஹிரண்ய சிரார்த்தமாவது செய்து ஒருநாள் மட்டும் மகாளயம் செய்து மற்ற நாட்களில் தர்ப்பணம் செய்யலாம். இதுவும் முடியாதவர்கள் மாத்ரு,பித்ரு, திதி அல்லது மஹாபரணி, விசதீபாதம், மத்யாஷ்டமி முதலிய புண்ணிய காலங்களிலாவது ஹிரண்யமாக செய்வது விஷேசமாகும். தனவுள்ளம் கொண்டவர்களுக்கு பணத்தால் கிடைக்கும் நன்மைகளையும் தர்ம சாஸ்திரம் விவரித்து கூறுகிறது ..



## மாதங்களை அறிவீர்! மனம்போல வாழ்வீர்!!..

தேவர்களை ஆராதிக்கும்போது நம் வாழ்வில் சௌபாக்கியத்திற்கு குறைவிருக்காது. பித்ருக்களை திருப்தி செய்வதும், தேவர்களை ப்ரீதி செய்தலும் முக்கியமாகும். இதற்கான ஹோமங்கள், யக்ஞங்கள் உள்ளன. சிரார்த்தம். தர்ப்பணம் ஆகியவற்றை பித்ருக்களின் திருப்திக்காக செய்கிறோம். தெய்வ காரியங்களில் பக்தி எப்படியோ, அதுபோல பித்ருக்களின் காரியங்களில் சிரத்தை இருக்கவேண்டும். சிரத்தையாக செய்வதையே சிரார்த்தம் என்ற சொல் குறிக்கிறது. சிரத்தை என்பது பாவத்தை அகற்றவல்லது. சிரத்தையின்மையே பெரும் பாவமாகும். சிரத்தை இல்லாதவன் தேவர்களுக்கு நிவேதனம் அளிக்கத் தகுதியற்றவன் என்றும், சிரத்தையுடன் அளிக்கும் அன்னத்தைத்தான் அதிதி உண்ணவேண்டுமென்பதும் நியதி ..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிதுர்களுக்கு நாம் கொடுக்கும் சிரார்த்தம், அவர்களுக்கு தினமும் உணவு கொடுப்பதைப்போலவே பலன் தரும். ஏனெனில் நமக்கு ஒரு வருடம் என்பது அவர்களுக்கு ஒரு நாள்தான். மகாளய பட்சத்தில் எல்லா தேவதைகளையும் திருப்தி செய்யவே மகாளய சிரார்த்தம் செய்யப்படுகிறது. அமாவாசையில் எள்ளும், தண்ணீரும் இறைத்து தர்ப்பணம் செய்வது, அவர்களின் தாகத்திற்கு தண்ணீர் தருவதற்கொப்பானதாகும். சிம்ம, கன்னி ராசிகளில் சூரியன் பிரவேசித்தவுடன் பிதுர் தேவதைகள் எமதர்மனிடம் விடைபெற்றுக்கொண்டு தத்தமது குடும்பத்தாரோடு தங்க வந்துவிடுகிறார்களாம்.

மகாளயம் என்பதற்கு எல்லா பிதுர் தேவதைகளும் ஒன்றுகூடுவதென்றும் பொருள்படுகிறது. ஹிந்துமதம் கூறுகின்ற ஐம்பெரும் வேள்விகளில் பித்ரு வழிபாடும் ஒன்றாகும். 'தென்புலத்தார்' என்ற சொல்லால் பிதுர்க்கள் அழைக்கப்படுவதும் பெருமை தரும்!









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உணவின் தூய்மையால் நற்பண்புகள்!..

ஆலயங்கள்தோறும் கறிகாய் வகைகளை கட்டித் தொங்கவிட்டு நிறைபணி விழாவை கொண்டாடுவது, இந்த புரட்டாதி மாதத்தில் வருகின்ற பௌர்ணமி நாளில்தான்! கடவுள் நமக்காக இவ்வளவு தாவர உணவுகளை படைத்திருக்கிறார் ..; அதனால் நமது பசி தீருகின்றது என்பதை இந்த விழா உணர்த்துகிறது. எல்லாவித சத்துக்களும் இந்த தாவர உணவில் இருக்கும்போது எதற்காக புலாலுக்காக உயிர்களைக் கொல்லவேண்டும் என்ற கேள்வியையும் இது கொண்டிருக்கிறது.

எது அறம் என்ற கேள்விக்கு திருவள்ளுவப்பெருமான் ‘கொல்லாமை’ என்று பதிலளிக்கிறார். நெய்யைத் தீயில் சொரிந்து செய்கின்ற ஆயிரம் யாகங்களின் பலனைவிட, ஒரு உயிரைக் கொல்லாமலிருப்பதால் கிடைக்கும் பலன் உயர்ந்தது என்று தனது குறளில் கூறியிருக்கிறார்.

‘உணவில் இருக்கின்ற தூய்மையே நற்பண்புகள் வளர முக்கிய காரணமாகின்றன’ என்று முனிபுங்குவர்கள் கூறியிருக்கிறார்கள். உணவுக்கும், மனநிலைக்கும் நெருங்கிய தொடர்பிருக்கிறது.

புரட்டாதி மாதம் கற்றுத்தருகின்ற இந்த தத்துவம் அவசியம் கடைப்பிடிக்கவல்லது. மாமிச உணவில்லாமலேயே மனிதன் சிறந்த ஆரோக்கியத்துடன் வாழ முடியும் என்பதைக் காட்டுகிறது இவ்விழா!



# காகம் உண்ண மறுத்தால், தவிக்கும் அடியவர்கள்!

புரட்டாதி மாதமென்றாலே சனிபகவானின் ஞாபகம் வராமல் போகாது. ஏனெனில், புரட்டாதி மாதத்திற்குறிய விஷேட நாள் என்றால் அது சனிக்கிழமைதான்!

பிரச்சினைகளிலிருந்து விடுபட இந்த மாதத்திற்காக காத்திருப்பார்கள் – சனி பகவானை திருப்திப்படுத்துவதற்காக.

இந்த மாதத்தில் வரும் எல்லா சனிக்கிழமையிலும் விரதமிருந்து, சனி பகவானை வழிபட்டு, அவரின் வாகனமாகிய காகத்திற்கு உணவு படைத்து, அது உண்டபின்பே தாம் உண்ணும் அடியார்கள் அளப்பரியர். காகம் வராவிட்டாலும், வந்தாலும் உண்ணாவிட்டாலும் அது உண்ணும்வரை காத்திருக்கும் இந்துக்களை காணும்போது இதயம் பெருமிதம் கொள்ளும்.

சில வீடுகளில் படைக்கின்ற உணவுகளை காகம் உண்ணாமல் இருக்கும்போது அந்த அடியார்கள் தவித்துவிடுவர். தாம் சமைத்ததிலும், படைத்ததிலும் குறை நேர்ந்திருப்பதாக கருதி, மீண்டும் புதிதாக சமைப்பவர்களும் உண்டு. மீண்டும் காகத்தை அழைத்து, அது உண்டபின்பே தாம் உண்பர். புரட்டாதி மாதத்தின் கடைசி சனிக்கிழமை சனி விரதத்தின் மகிமைக்கு சிகரம் வைத்ததுபோல இருக்கும். அன்று சனிபகவானுக்கு எள், எண்ணை எரித்து விரதத்தை நிறைவு செய்வார்கள் ..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## புரட்டாதி மாத குருபூசைகள்! ..

1. ஏனாதிநாதர்
2. நரசிங்கமுனையரையர்
3. உருத்திரபசுபதியார்
4. திருநாளைப்போவார்
5. அருணந்தி சிவாச்சாரியார்
6. கடையிற்சுவாமிகள்

## கோமதி அம்மனை அறியுங்கள்! ..

சிவனும், சக்தியும் இணைந்த வடிவம் நமக்கெல்லாம் தெரியும் அல்லவா! ஆனால் சிவனும், விஷ்ணுவும் இணைந்த கதை எல்லோருக்கும் தெரியுமா? ..

தெரிந்திருந்தால் இந்த கோமதி அம்மனையும் தெரிந்திருக்கும் ..

ஒருநாள் உமாதேவிக்கு ஒரு எண்ணம் உதித்தது.. 'சிவபெருமானும், மகாவிஷ்ணுவும் இருவேறு பிரபஞ்ச சக்திகளாகவே திகழ்கிறார்களே, இருவரும் இணைந்த கோலத்தில் அருள்புரிந்தால் உலகம் இன்னும் குதூகலம் கொள்ளுமே .. ' என்று உள்ளுக்குள் மகிழ்ந்தாள். அவர்கள் இருவரும் பொருந்தி அருள்பாலிக்கும் காட்சிதனை காண விரும்பினாள்.

ஐயனுக்கும் பார்வதியின் உள்மனம் புரிந்தது. இந்த ஆசை தான் மட்டும் காண்பதற்கு அல்ல, சிவனும், விஷ்ணுவும் இருவேறு கோணங்கள் என்று பேதமையாக கருதும் பக்தர்களுக்காவே என்றும் அறிந்தார்.

தாம் இருவரும் இணைந்த கோலத்தில் தென்படும்போது தமது பக்தர்களிடையே ஏற்படும் வாக்குவாதங்களும், பேதங்களும் இல்லாமல் போவதற்கு வழி பிறக்கும் என்பதையும், இருவருமே சமமாக உயிர்களை பாலிப்பவர்களே என்று காண்பிக்க முடியும் என்றும் இறைவன் உணர்ந்தார்.

அன்னையின் கோரிக்கையை ஏற்று மகா விஷ்ணுவை வரவழைத்தார் பெருமான். பூவுலகம் மகிழ, தேவியின் வேண்டுகோளை வெளிப்படுத்தினார்.

தங்கையின் விருப்பத்தை மறுப்பாரா ஸ்ரீ ஹரி? அதுவும், முழுமுதற் பரம்பொருளுடன் இணைவதென்றால் கிடைக்கின்ற பாக்கியமா! உடனேயே ஒப்புக்கொண்டார்.

இணைவதற்கு முன்னர், சிவபிரான் பார்வதி தேவியிடம் ஒரு விண்ணப்பத்தையும் முன்வைத்தார் .. ''பொதிகைமலை அருகே நீ புன்னைவன தலத்தில் வேண்டியபடியால், உன் விருப்பப்படியே நாங்கள் இணைகிறோம். அதேபோல எங்கள் இருவருக்கு நீயும் மகா சக்தியாக காட்சிதர வேண்டும் ..'' என்றார்.

அவ்வாறே அன்னையும் இசைந்து காட்சி தந்து கோமதி எனப் பெயர் பெற்றாள்.

சிவனும், திருமாலும் இணைந்த கோல்த்தில் சங்கர நாராயணன் ஆனார்கள். அகிலமே ஆனந்தத்தில் மூழ்கியது ..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஸ்ரீமத் பகவத் கீதை

## -- பாரதியார் உரை --

தொகுத்து, தொடராக தருபவர் :
வை. திருச்செல்வம்

14





## ஞான கர்ம சந்யாச யோகம்

.. ‘‘ அர்ஜுனா, பிறப்பற்றே னெனினும், அழிவற்றே னெனினும், உயிர்களுக்கெல்லாம் ஈசனே யெனினும், யான் எனது பிரகிருதியில் நிலைபெற்று ஆத்ம மாயையால் பிறப்பெய்துகிறேன். 06

பாரதா, எப்போதெப்போது தர்மம் அழிந்துபோய் அதர்மம் எழுச்சி பெறுமோஅப்போது நான் என்னைப் பிறப்பித்துக் கொள்ளுகிறேன். 07

நல்லோரைக் காக்கவும், தீயன செய்வோரை அழிக்கவும், அறத்தை நிலைநிறுத்தவும் நான் யுகந்தோறும் பிறக்கிறேன். 08

எனது தெய்வத்தன்மை கொண்ட பிறப்பும் செய்கையும் இங்கனமென்பதை உள்ளபடி யுணர்வோன் உடலைத் துறந்து பின்னர் மறுபிறப்பு எய்துவதில்லை. அர்ஜுனா! அவன் என்னை எய்துகிறான். 09

விருப்பத்தையும், அச்சத்தையும், சினத்தையும் துறந்தோராய், என் மயமாய், என்னை அடைக்கலம் புகுந்து ஞானத்தவத்தால் தூய்மை பெற்று என்னியல்பு எய்தினோர் பலர். 10

யாவர் என்னை எங்கனம் வேண்டுகிறார்களோ, அவர்களை நான் அங்கனமே சார்கிறேன். பார்த்தா, மனிதர் யாங்கனும் என் வழியையே பின்பற்றுகிறார்கள். 11

தொழில்களில் வெற்றியை விரும்புவோர் இங்கு தேவதைகளைப் பூஜை செய்கிறார்கள். மனித வுலகத்தில் தொழிலினின்றும் வெற்றி விரைவில் விளைவதன்றோ! 12

குணத்துக்கும், செய்கைக்கும் தக்கபடி நான் நான்கு வர்ணங்களை சமைத்தேன். செய்கை யற்றவனும் அழிவற்றவனுமாகிய யானே அவற்றைச் செய்தேனென்றுணர் .. 13



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மாத்தளை ஸ்ரீ முத்துமாரியம்மன்!









நம் திருநாட்டின் எழிலுக்கு எழில் சேர்க்கும் நகரம் மாத்தளை. பன்னகம் என்றும் இம்மாநகரை நேசித்து அழைப்பர்.

இந்நகரின் பெருஞ்சிறப்புக்கு காரணமாகி, இங்கே வானுயர்ந்த கோபுரவாசம் புரிந்து வருபவள் --

ஸ்ரீ முத்துமாரி அம்மன்!

இலங்கையில் பெருந் திருக்கோயில்களை தரிசித்து வரும்போது, இந்த குளுகுளு நகருக்குள் நுழைந்துவிட்டால், முதலில் கவனத்தை அள்ளுகிறது அன்னையின் கம்பீர உறைவிடம்! நாட்டின் பிரசித்தி பெற்ற தலங்கள் பலவும் தனியான ஒரு சிற்றூரில் அமைந்து, அடியார்களை உள்வாங்குவது வழக்கம். ஆனால், இந்த அம்மன் மாநகரின் மத்தியிலேயே தலத்தை அமைத்துக்கொண்டு, பக்தர்களின் அலைச்சலைக் குறைத்துவிடுவது கவனிக்கத்தக்கது.

எந்த சந்தடியும், இரைச்சலும் இந்த அம்மனின் தரிசனத்திற்கு இடையூறு தருவதற்கு இடம் தராவண்ணம் அமைந்திருக்கிறது திருக்கோயில்.

ஐந்து ரதங்களோடும், அழகைக் கொட்டும் சிற்பங்களோடும், ஏகப்பட்ட பரிவார மூர்த்திகள் சகிதம் அருள்மழை பொழியும் இந்த அன்னைக்கு நாடு முழுவதும் பக்தர்கள்தான்!

கண்டியிலிருந்து 27 கிலோ மீட்டர்தான். நாட்டின் எப்பகுதியிலிருந்தும் சிலமணி நேரப் பயணம்தான்.

யாராக இருந்தாலும், எந்த ஊரிலிருந்து வந்தாலும் ஆதரிப்பதற்கு காத்திருக்கும் அம்பிகையாம் இந்த ஸ்ரீ முத்துமாரியம்மன், 108 அடி கோபுரத்தில் நமக்காக காத்திருக்கிறாள். தாமதிக்காமல் சென்று வழிபடுதலே நாம் செய்யவேண்டியது ..

அதிலும், நவராத்திரி காலத்தில் என்றால் தரிசனம் இன்னும் சிறப்பாக இருக்கும். நாளொரு அலங்காரமும், திவ்ய பேரொளியும் சிந்த தேவி பக்தர்களை மகிழ்விக்கும் இந்த ஒன்பது நாட்களும் பக்திப் பிரவாகத்தில் ஆலயம் திக்குமுக்காடும் ..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அதிர்ச்சி, அற்புதம், பக்தி!
கதைகள் .. தொடர் -- 02

( கடக ராசிக்காரர்கள்
அறியவேண்டிய புராணம் இது .. )

# தெரிந்த இராசிகள், தெரியாத தெய்வங்கள்!



# கற்கடேஸ்வர நாதர்!

சென்ற இதழ் தொடர்ச்சி ..







## சிவனை பூஜித்த நண்டு! ..

நள்ளிரவு முழுவதும் விழித்திருந்து உருவிய வாளுடன் காத்திருந்த இந்திரனை அந்தக் காட்சி திகைக்கச் செய்தது!

முதலாவதாக மலர்ந்த அந்த ஒரே ஒரு மலர், மலர்ந்த மறு விநாடியே நீரினுள் இழுத்துச் செல்லப்பட்டது. அந்த இடத்தில் நீர்க்குமிழிகள் அடுத்தடுத்து மேல் நோக்கி வந்து வெளியேறின.

என்ன ஆச்சரியம்! இது எப்படி சாத்தியம்!!

அப்படியானால் அந்த மலர் எங்குதான் செல்கிறது? யார் அதை இழுத்துச் சென்றார்கள்.?

வியப்பின் உச்சத்தில் தடுமாறிய இந்திரன் அந்த மலர் அமிழ்ந்த வழியே தேடிச் சென்றான். தாடாகத்தின் கரையிலே விடியற் கருக்கலில் குளித்து நிற்கின்ற பெருமானின் கோயிலுக்குள் வந்து சேர்ந்தான். அப்படியே கருவறைக்குள் எட்டிப்பார்த்தவன் கண்ட காட்சி அவனை உறையச் செய்தது!!

ஆமாம்! எந்த மலரை தன் கண்ணெதிரே கவர்ந்து செல்லக் கண்டானோ அதே தாமரை கருவரையில் இருந்த இறைவனின் முடிமேல் வைக்கப்பட்டிருந்தது!



இந்த அதிசயத்தால் தேவேந்திரனின் மேனி நடுங்கியது. தான் பறித்து பூஜிக்க வேண்டிய மலர்கள் தினமும் இப்படித்தான் கவரப்பட்டு இங்கே வந்துவிடுகிறது என்பதை அறிந்தான். ஆயினும் வானவர் தலைவனாகிய தமது பூஜையில் குறுக்கிடுவதற்கு என்ன தைரியம் இருக்க வேண்டும்!

தான் சிவபெருமானை பூஜை செய்து மகிழ்விக்கும் முன்பாக வேறொருவர் மலர்களை கவர்வதை இந்திரனால் ஏற்க முடியவில்லை. தவிர, தனது இந்திர பதவியை அலட்சியம் செய்யும் அந்த மர்ம நபரையும் விட்டுவிட அவன் தயாராக இல்லை. உருவிய வஜ்ஜிராயுதத்துடன் ஆலயம் முழுவதும் தேடியும் யாரும் அகப்படவில்லை.

'இன்று தப்பி விட்டான். நாளை பிடித்தே தீருவேன்' என்ற ஆதங்கத்தோடு வானுலகம் திரும்பினான் தேவேந்திரன்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









## நண்டு செய்த சிவபூஜையில் மகிழ்ந்தார் இறைவன் ..! மலைத்தான் இந்திரன் ..!!

மறுநாளும் நள்ளிரவு முழுதும் அகழிக்கரையில் காத்திருந்தான் இந்திரன். எதிர்பார்த்த அந்த அதிகாலை வேளையில் காத்திருந்த தருணம் வந்தது ..

அப்போதுதான் அந்த அதிசயம் நிகழ்ந்தது.

நீருக்குள்ளிருந்து ஒரு பெரிய நண்டு வெளிப்பட்டு, மலர்ந்த தாமரையை நோக்கி நகர்ந்தது. சட்டென்று அம்மலரைப் பறித்து இழுத்துக்கொண்டு அகழிக்குள் அமிழ்ந்து மறைந்தது. மறுகணமே கரையேறிய நண்டு வேகமாக தாமரை மலரை இழுத்துச் சென்றது. கண்ணெதிரே நடந்த இக் காட்சியால் அமரேந்திரன் திகைத்துவிட்டான். ஆத்திரம் மேலிட நண்டினை துரத்தியபடியே சென்றான். இருவரின் வேகமும் ஆலயத்தின் கருவரையில் வந்து நின்றது.

வாளை உருவியவாறு நண்டினை இந்திரன் நெருங்கியபோது, அந்த நண்டு இறைவனின் முடிமேல் மலரை சமர்ப்பித்துவிட்டு லிங்கத்தை வேகமாக வலம் வந்தது. இதனை அறியாத இந்திரன் லிங்கத்தை தாக்கும் முகமாக வாளை வீசினான். நண்டும் லிங்கத்தின் பின்புறமுள்ள சிறிய துளையில் ஒளிந்துகொள்ள, வேகமாக வந்த வாள் பெருமானின் முடிமேல் பட்டது.



பக்தர்கள் இருவரின் போட்டியை இதுவரை ரசித்த பரம்பொருள் இனியும் சகிக்குமோ? ஆனையும், சிலந்தியும் போரிட்டு மடிந்த கதைபோல் ஆகிவிடக்கூடாது என்றெண்ணி அக்கணமே வெளிப்பட்டார் பெருமான். சட்டென அங்கே கிளம்பிய பேரொளியால் கருவரை மின்னியது. நண்டுக்கு அடைக்கலம் தந்த நிலையில் அமரேந்திரனுக்கு காட்சி தந்தார் ..



''இந்திரா, சினம் தவிர். நாள்தோறும் எம்மை வழிபடும் ஜீவராசிகளில் இந்த நண்டும் ஒருவர். உன் பூஜையில் இவர் குறுக்கிடவில்லை. நெடுங்காலம் இவர் செய்துவந்த பூஜையில் நீதான் சிலநாள் குறுக்கிட்டாய் .. " என்றார்.

பெருமானின் அமுதத் திருவாய்மொழியால் தெளிவடைந்த தேவேந்திரன் வீழ்ந்து வணங்கி சப்த நாடியையும் ஒடுக்கினான். ஈ, எறும்பு போன்ற சிற்றுயிர்களுக்கும் அருள்தரும் இறைவனின் கருணையை புகழ்ந்துபாடி கண்ணீர் சொரிந்தான் ..



மறு பக்கத்திலே நிறைவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீராத நோய்களையும் தீர்ப்பவள்

# அருமருந்து நாயகி!..

கடகம் என்றால் நண்டு என்று பொருள். எல்லோரையும் பல நாமங்களில் காத்து பரிபாலனம் புரியும் சிவபெருமான், கடக ராசிக்காரர்களையும் இன்னல்களிலிருந்து காப்பவராக இருப்பதால் கற்கடேஸ்வரர் என்ற திருநாமத்தை உடையவராகிறார்.

கடகராசிக்காரர்கள், அதிலும் ஆயில்ய நட்சத்திரக்காரர்கள் வழிபடவேண்டிய சிறப்பான ஈஸ்வரர் இவர்.

தன்வந்திரி பகவானுக்கு பூஜை செய்து மருந்து உட்கொள்வதற்கும், வேள்விகள் யாகங்கள் நடத்துவற்கும் உகந்த நாளாக திகழ்வது ஆயில்ய நட்சத்திரம் அமைகின்ற தினமே.

ஆயில்ய நட்சத்திர நாட்களில், அதுவும் குறிப்பாக தேய்பிறை -- அஷ்டமி கூடிய நாட்களில் கற்கடேஸ்வரருக்கு பால் அபிஷேகம் செய்வித்து, அவருடைய தலத்து நாயகிக்கு சந்தனாதி தைலங்களாலும், நல்லெண்ணையாலும் காப்பிட்டு அந்த தைலத்தையே உட்கொண்டால் தீராத நோய்களும் தீர்ந்து விடுகிறதாம்!

இதனால்தானோ என்னவோ கற்கடேஸ்வரரின் தல அம்பிகைக்குப் பெயர் 'அருமருந்து நாயகி' என்பதாம்! ..



**ஈ எறும்புக்கும்**
**இசையும் இறைவனுக்கு முன்**
**இந்திரப் பதவி**
**எம்மாத்திரம்?**

## வாசிப்பு பொக்கிஷங்கள்..






சமயத்தின் குரலாக பெருமளவு நூல்கள் இருக்கின்றன.
இன்றும் புதிது புதிதாக வெளிவருகின்றன. அத்தனையும் நமக்கான பொக்கிஷங்கள்!
சமயத்தின் வழிகாட்டிகள்!!
'கண்ணனை ஜெயிக்க வேண்டுமா?'
போன்ற அற்புதமான நூல்களை தேடி வாசியுங்கள்!
வாசிப்பை ஊக்கப்படுத்துங்கள்!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## நவராத்திரி தகவல்கள்

சிவராத்திரியைப்போலவே நவராத்திரியிலும் நான்கு வகைகள் இருக்கின்றன. ஒரு வருடத்தில் இந்த நான்கு நவராத்திரிகளும் வருகின்றன. ஆனிமாத அமாவாசைக்குப்பின் வரும் ஒன்பது நாட்களை 'ஆஷாட நவராத்திரி' என்றும், புரட்டாதி அமாவாசைக்குப் பிறகு வரும் ஒன்பது நாட்களை 'சாரதா நவராத்திரி ' ( மகா நவராத்திரி என்றும் அழைப்பதுண்டு ),
தை மாதத்து அமாவாசைக்குப் பிறகு வருவதை 'மகா நவராத்திரி ' என்றும், பங்குனி மாத அமாவாசைக்குப் பிறகு வருவதை 'வசந்த நவராத்திரி ' என்றும் அழைப்பார்கள்.

இந்த நான்கு காலங்களிலும் விரதங்கள், பூஜைகள் மேற்கொள்ள முடியாதவர்கள் குறைந்த பட்சம் சாரதா நவராத்திரியிலாவது ஒன்பது நாட்களும் அம்பாளை பூஜிக்க வேண்டும் என்று பெரியோர்கள் வலியுறுத்தினார்கள்.

அதன் வழக்கத்திலேயே நாம் இப்போது நவராத்திரியை அனுட்டித்து வருகிறோம்.



## "ஆற்றங்கரை அழகனுக்கு ஒரு பாமாலை!"

'இறைவனைப் போற்றிப்பாடுவதென்றால் அதுவே பிறவியின் ஆனந்தம் ' என்று வாழ்கின்ற ரகத்தைச் சேர்ந்த பக்தர்கள் ஒரு பெரும் தொகை.

நம் நாட்டில் இவர்களுக்கென்று ஒரு தனி இடமே இருக்கிறது. அந்த வரிசையிலே மன்னார் மாவட்டத்திலிருந்து பக்தி சொட்ட தெய்வீக பாமாலைகளை புனைந்து, அடிக்கடி இறைவனுக்கு சாத்தி வருபவர் சின்னையா சிவபாலன் என்கிற இந்த அடியார் ஆவார்.

முருகனோ, சிவனோ, அம்பிகையோ என்று யாருடைய விழாக்காலமாகட்டும் -- அந்தந்த விழாக்காலத்திலே அந்த மூர்த்திக்கு தமிழும், இலக்கணமும் மணக்க மணக்க பாடல்கள் இவரிடம் தயாராகி விடுகிறது. அது என்ன மாயமோ, அற்புதமோ.. சற்றும் பிசகாத சந்தமும், நடையும் இவரது பாடல்களில் குறையாத செல்வமாக கொட்டிக்கிடக்கும்.

சரணத்திலும், பல்லவியிலும் இறைவனின் சிறப்புகள் அருவியாகப் பாயும். ரசிகத்தன்மை யற்றவர்களைக்கூட கவர்ந்திழுத்து, கதிரையின் நுனிக்குத் தள்ளும் தித்திப்பு இவருடைய வரிகளுக்கு இருக்கிறது.

சமீபத்தில் நடந்து நிறைவுற்ற செல்வச்சந்நதி முருகனுக்கும் தனது பாமாலையை எழுதி பூமாலையாக அணிவித்து மகிழ்ந்திருக்கிறார்.



சமயச்செய்திகள்!



'ஆற்றங்கரை அழகனுக்கு ஒரு பாமாலை ..' என்ற மகுடத்தில் பொழியப்பட்டது அந்த சுந்தர கானம்.. அதில் திளைத்த வேலவனின் இன்பத்திற்கு கேட்கவா வேண்டும்! தாமும் மயங்கிக்களித்த அடியார்கள் தமது கைமாறாக இந்த கவிஞரை விழா எடுத்து கௌரவித்தனர். வழமை போலவே மன்னார் சைவக்கலை இலக்கிய மன்றம் இந்த நிகழ்வை நிகழ்த்திய காட்சிகளே இவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெய்வீகத் தகவல் அறிவோம்..

தீபாராதனைகளில் பல வகைகள் உண்டு. இறைவனுக்குச் செய்யும் 16 வகை உபசாரங்களில் தீபாரதனையும் ஒன்று.

தெய்வங்கள் பலரும் தீபாராதனையின் போது அந்த தீபத்தில் வந்தமர்ந்து, பெருமானை தரிசித்துச் செல்கிறார்கள் என்பது ஐதீகம்.

தீப வழிபாட்டில் பல வகை தீப வரிசைகள் இடம்பெறுகின்றன. ஒவ்வொரு வரிசையும் அர்த்தங்களோடு கூடியிருக்கின்றன.

நட்சத்திர தீபங்கள் காட்டப்படும்போது நட்சத்திரங்கள் இறைவனை வழிபட்டு ஒளி பெறுகின்றன.

ஒன்பது தீபங்கள் நவ சக்திகளைக் குறிக்கும். ஏழு தீபங்கள் சப்த மாதர்களைக் குறிக்கின்றன. பஞ்ச தீபங்கள் நிவர்த்தி கலை, பிரதிட்டா கலை, வித்யா கலை, சாந்தி கலை, சாந்தி அதீத கலை என்ற ஐந்து கலைகளைக் குறிக்கும்..

மூன்று தீபங்கள் சூரியன், சந்திரன், அக்னி என்ற மூன்று ஒளிகளையும், ஒற்றை தீபம் சரஸ்வதியைக் குறிப்பதாகவும் சொல்வர்.



## தீபாராதனை



தீபாராதனை நடக்கும்போது இறுதியாக கும்பதீபம் காண்பிக்கப் பெறும். கும்பதீபமானது சதாசிவ தத்துவத்தைக் குறிக்கும்.

தீபாராதனை செய்யும்போது மூன்று முறை காட்டுவார்கள். முதல் முறை உலக நலத்திற்காகவும், இரண்டாம் முறை ஊரில் உள்ள மக்களின் நல்வாழ்வுக்காகவும், மூன்றாம் முறை ஐம்பெரும் பூதங்களால் இடையூறின்றி நல்லது நடக்கவேண்டும் என்பதற்காகவுமாக மும்முறை தீபம் காட்டப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அட்சய பாத்திரம்!




முற்காலத்திலே மதுரையில் ஆபுத்திரன் என்ற ஏழை இருந்தான். வீட்டாரால் ஒதுக்கப்பட்டதால் பிச்சை எடுத்தே வாழ்ந்து வந்தான். ஆனால் பிறருக்கு உதவுவதில் விருப்பம் உடையவன். தனது பிச்சைப்பாத்திரத்தை ஏந்திச்சென்று நகரெங்கும் உணவு பெறுவான். வீடு திரும்பியதும் பசியோடு இருப்பவர்களுக்கு தந்து தானும் உண்பான்.

ஒருநாள் இரவில் மழையில் நனைந்தவாறு சில வழிப்போக்கர்கள் அவனிடத்தில் வந்தார்கள். பசியால் வாடிய அவர்கள் ஏதாவது உண்ணத்தருமாறு கேட்டார்கள். அவர்களின் பசியைப் போக்க முடியாத நிலையில் ஆபுத்திரன் கலங்கி அழுதான். தனது பிச்சைப்பாத்திரத்தில் எதுவும் இல்லாததை நினைத்து வருந்தியவாறு இருந்தபோது --

ஒரு ஒளிவெள்ளம் அவன்முன் தோன்றியது. அங்கே சிந்தாதேவி (சரஸ்வதி ) காட்சியளித்தாள்.'' மகனே வருந்தாதே, உன் பாத்திரம் இனி இதுதான். உலகம் முழுவதற்கும் இதிலிருந்து உன்னால் உணவு தரமுடியும் ..'' என்றவாறு ஒரு பாத்திரத்தை அவனிடம் தந்தாள். அதுவே அட்சய பாத்திரம். அள்ள அள்ளக் குறையாதது அட்சய பாத்திரம் என்பார்கள். அது உருவான கதை இதுதான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# "பிரியேன் என்று சத்தியம் செய்"

'நல்லது செய்தால் கெடுதல் வந்துசேறும்' என்று எதற்கெடுத்தாலும் நாம் சலித்துக்கொள்கிறோம். அது உண்மைதான் என்பதை சிவனாருக்கே நடந்த இந்த சம்பவத்தின் மூலம் அறியலாம் ..

ஒரு கொடூரமான அசுரன் இருந்தான். அவன் பெயர் பசுமன். இரக்கமே இல்லாத அவனைப்பார்த்து மூவுலகுமே அஞ்சியது.

விரைவில் எல்லோரையும் வெல்வதற்காக சிவபெருமானை நோக்கி ஒருநாள் கடும் தவம் தொடங்கினான். அவனின் தவத்துக்கு மனமிரங்கி, ஒருநாள் இறைவன் அவன்முன் தோன்றினார்.

"எம்பெருமானே, நான் விரைவாக அனைவரையும் வெல்ல வேண்டும். எனவே, நான் தொட்டவுடன் யாராக இருந்தாலும் அவர்கள் எரிந்துபோக வேண்டும் .." என்று வரம் கேட்டான்.

பரமனும் அந்த வரத்தை அளித்தார். வரம் பெற்றதும், அந்த அசுரன் அவரையே கொல்வதற்கு முடிவு செய்தான். அவரை தன் கையால் தொடுவதற்காக அவர் போகும் இடமெல்லாம் பின்தொடர்ந்து சென்றான். இதை அறிந்துகொண்ட ஈசன், விரைவாக மறைந்தார்.

இந்த நீசச்செயலை அவதானித்துக்கொண்டிருந்த மகாவிஷ்ணுவுக்கு கோபம் வந்தது. அசுரனை எப்படியும் ஒழித்துவிட முடிவு செய்தார்.

ஒரு மோகினியின் வடிவத்தில் அவன்முன் தோன்றினார். அவளின் பேரழகு கண்டு பசுமன் மோகம் கொண்டான்.

தான் பெற்றுக்கொண்ட வரத்தையும் மறந்து, மையலுக்கு ஆளானான். தன்னை மணப்பதற்கு இசையும்படி மோகினியை வற்புறுத்தினான்.

மோகினியும் "என்னை என்றும் பிரிய மாட்டேன் என்று உங்கள் தலைமீது கைவைத்து சத்தியம் செய்தால்தான், உங்களின் ஆசைக்கு இணங்குவேன்" என்றாள்.

"அதற்கென்ன, இதோ .." என்றவாறு தன் தலைமேல் தொட்டு சத்தியம் செய்தான். பிறகென்ன, அக்கணமே எரிந்து சாம்பலானான் ..

'வரம்கொடுத்தவன் தலையிலேயே கை வைத்தார்கள்.' என்று நம் ஆட்கள் சொல்லிக்கொள்வதற்கு இந்த புராணச் சம்பவம் காரணமாகவும் இருக்கலாம் ..






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ' பக்தி விஜயம்.. ' பாலர் வகுப்புகளில் ..

அன்பான சிறார்களுக்கு விஷேசமான நவராத்திரி வாழ்த்துக்கள் ..




### ஊக்கமே கல்வி!

வாயு புத்திரன் அனுமன் ஒரு சிறந்த மாணவனும் ஆவார்.

சாஸ்திரங்களில் மட்டுமல்லாமல் இசைத்துறையிலும் சிறந்து விளங்கியவர் அவர்.

இசை வல்லுனராகிய அகத்தியரே அனுமனின் குருநாதர்.
ஒருநாள் அவரது வகுப்பறையின் வழியாக சென்றுகொண்டிருந்த நாரதர் அனுமன் வீணை இசைப்பதைக்கண்டு நகைத்தார்.
" மனிதர்களுக்கே எளிதில் கைவராத இசையை நீ கற்பதாவது .." என்று கேலி செய்தார்.
இதைக்கேட்டு உடனே அனுமனுக்கு ஊக்கம்தான் பிறந்தது.
" மனதை ஒருமைப்படுத்தினால் ஆகாதது ஒன்றுமில்லை " என்று சூரிய பகவான் தனக்கு கூறியதை கருத்தில் கொண்டார். கடும் தியானம் புரிந்து மனவலிமை பெற்றார். இசையை மிகச்சிறப்பாகக் கற்று தனது குருநாதரையே அசத்தினார் ....




**வாசிப்பு இன்பத்தில் திளைப்பீர், ஆன்ம பலத்தில் வாழ்வீர்! ..**

( இதுவரை பதிவு செய்யாத வாசகர்கள் சந்தாதாரர் ஆகி, இப்பணிக்கு ஒத்துழைக்குமாறு அன்புடன் வேண்டுகிறோம் ..)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ' பக்தி விஜயம்.. '

## எங்கும், எல்லோர் வாழ்விலும் ..




மாதாந்த மலர்கள்..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org